பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 02 டிசம்பர் 2017 | விதி : 77



அடக்க முடியாத எழுச்சி



மீண்டும் ஆயுதப் போர் வெடிக்கும்




வயது வந்தோர்க்கு மட்டும்




டென்னிஸ் ஓ டென்னிஸ்




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'





ஸ்ரீதேவியைப் போலவே அவரது மகளும் அழகுக்காக மூக்கு அறுவைச் சிகிச்சை செய்யவுள்ளார்.

தமிழில் கொடி கட்டிப் பறந்த ஸ்ரீதேவி ஹிந்தியில் நடிக்கத் தொடங்கியபோது அவருக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. ஆனால் மூக்கு அவருக்கு மைனஸாக இருக்கவே அறுவைச் சிகிச்சை செய்து மாற்றிக் கொண்டார்.

அவரின் மகள் ஜான்வியின் மூக்கு ஸ்ரீதேவியின் பழைய மூக்கைப் போன்றே உள்ளது. இதை சினிமா உலகத்தவர்கள் மைனஸாக சொல்லவே, அம்மாவைப் போன்று அவரும் அறுவைச் சிகிச்சை செய்யவுள்ளாராம்.

தளபதி படத்தில் ரஜினி - மம்முட்டி இணைந்து நடித்தார்கள். அதன் பிறகு இருவரும் சேர்ந்து நடிக்கவில்லை.

இப்போது 26 வருடங்களின் பின்னர் மராட்டிய படத்தில் இணைந்து நடிக்கவுள்ளனர். தீபக் பாவேஷ் என்பவர் இப்படத்தை இயக்கவுள்ளார். படத்திற்கு பஷாயதன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, பெங்காலி, ஆங்கிலம் எனப் பல மொழிகளில் ரஜினி நடித்துள்ளார். ஆனால் அவரின் தாய்மொழியில் இதுவே முதல்படம்.



அஜித் - விஜய் ரசிகர்களிடையே மோதல் ஏற்படுவது வழ
சமூகவலைத்தளத்திலும் இந்த ரசிகர்கள் மோதிக் கொள்வது வ
கருவாகக் கொண்டு ஒரு படம் உருவாகின்றது.

இந்தப் படத்தில் இத்தாலியை சேர்ந்த ரெமோனோ ஸ்பெ
நடிக்கிறார். ராஜ்சூர்யா, ராம்சரவணன் நாயகர்களாக நடிக்கவு



# ஆட்டுவித்தால்...!

- தமிழரசன் -

ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா... பாடல் வசனம் நம் - தமிழர் அரசியலுக்கு நன்கு பொருந்தும். இன்றைய நம் அரசியலை ஒருவர் ஆட்டுவிக்க நம் தமிழ் தலைமைகள் ஆடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆட்டுவித்த லில் தமிழர் நலன் அரசியலுக்கு அப்பால் பிராந்திய சுயநலன்தான் மேலோங்கி நிற்கிறது.
தமிழர் - ஈழத்தமிழர் நலனை, தன் சுயநலனுக்காக கூறுபோட்டு புசித்துக் கொண்டிருக்கிறது இந்தியா.


தமிழர் அரசியலில் இந்தியா தவிர்க்க முடியாத சக்தி மட்டுமல்ல தடுக்க முடியாத சக்தியும்கூட. ஈழத்தமிழர்களின் உரிமைகளை - அதிகாரத்தை - எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் இந்தியாவின் பங்கு எத்தகையது என்பதை அரசியல் அறியாதவர்கள்கூட நன்கறிவர். விடுதலைப் புலிகளின் காலத்தில் தான் விரும்பியதை - தமிழர்கள் விரும்பாததை வலிந்து செலுத்த முற்பட்டு தோற்றுப்போய் உலக நாடுகளின் முன்பு தலைகுனிந்து நின்றது இந்தியா.
அந்தத் தலைக்குனிவுக்கு பழிவாங்கியும் அதன் அவமானம் தீரவில்லை. இதனால்தான் ஈழத்தமிழரின் இருப்பை அழித்து விடத் துடியாய் துடிக்கிறது.

விரும்பியோ, விரும்பாமலோ ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களின் அரசியல் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆசிர்வாதத்துடன் உருவாக்கப் பட்டது. புலிகளின் பலம் சிதைக்கப்பட்ட பின்னரும் - உலக, பிராந்திய, ஈழ அரசியல் அரங்குகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்த பின்னரும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக - ஈழத்தமிழர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றது. சுருங்கச் சொல்லின் இன்றைய அரசியல் நிலையில் பல ஆட்சிகள் மாறியபோதும் பல கட்சிகள் பலமிழந்த போதும் மாற்றமின்றி ஒரே பலமாக நிற்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். தமிழர்கள் மத்தியில் கூட்டமைப்பின் மீது சந்தேகங்களும் - நம்பிக்கை யீனங்களும் தொடர்ந்தாலும் மக்கள் வாக்களிப்பது என்னவோ அதற்கே.

இந்நிலையில்தான் ஈழத்தில் தொடர்ந்தும் தனது பிடியை இறுக்கவும் - மாறிவரும் பூகோள அரசியலில் தனது வல்லாதிக்கத்தை பிராந்தியத்தில் நிலைநிறுத்தவும் - மேலோங்கி நிற்கும் இந்திய சுசப்புணர்வை ஒழிக்கவும் திட்டங்களைத் தீட்டி வருகின்றது இந்தியா. இதற்காகத்தான் தமிழர் பிரச்சினைத் தீர்வில் நேரடித் தலையீட்டைத் தவிர்த்துள்ளது. மாறாக நமது கண்ணை வைத்தே நம் கண்ணைக் குத்துவது போன்று தமிழரின் அரசியலுக்குள் தீர்மானிக்கும் சக்தியாக இருக்க அது விரும்புகிறது. ஒரு பக்கமாகச் சென்றால் எங்கே தனது குட்டு அம்பலமாகி எதிர்ப்பு அரசியல் வட்டத்தினர் வளர்ந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இரண்டாகப் பிளக்கும் சதியில் இறங்கி அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல். எவ். பிரிந்ததே றோவின் - இந்தியாவின் திட்டப்படியேதான் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள். காரணத்தை அறிய முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை ஒருமுறை அலசி விடுவோம். ஈரோஸ் அமைப்பில் இருந்து வெளியேறிய பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், வரதராஜப் பெருமாள் ஆகியோர் இணைந்து உருவானதே ஈ.பி.ஆர்.எல்.எவ்., போராட்ட அமைப்பாகத் தொடங்கப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்பின் பின்னணியில் முழுமையாக இந்தியா இருந்தது. போராளிகளுக்கு இந்தியா பயிற்சியளிப்பு, ஆயுதங்கள், உதவிகள் வழங்கப்பட்டபோது இந்த அமைப்புக்கே அதிக உதவிகள் வழங்கப்பட்டன.

இந்தியா எது சொன்னாலும் தலையாட்டும் பொம்மைகளாகவே இந்த அமைப்பு செயற்பட்டது.




இந்தியாவின் தலையீட்டில் நடத்தப்பட்ட திம்புப் பேச்சிலும் அதிக அக்கறை செலுத்திய அமைப்பும் இதுவே. இலங்கை - இந்திய ஒப்பந்தம் - 13 ஆவது திருத்தச் சட்டமாகப் பரிணமித்தபோது - புலிகள் ஏற்காத இந்தத் தீர்வை - அதிகாரத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏற்றது. புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையே போர் தொடங்கியபோது புலிகளை காட்டிக் கொடுப்பவர்களாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் செயற்பட்டனர். அதுமட்டுமின்றி இளைஞர்கள் பலர் கடத்தப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமைக்கும் இந்த அமைப்பினரே காரணமாகினர். வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் புலிகளின் வேண்டுகோளை ஏற்று பல கட்சிகள் விலக, இந்தியாவின் செல்லப்பிள்ளைகளான ஈ.பி.ஆர். எல்.எவ்வினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இதனையே இந்தியாவும் விரும்பியது.

ஆனால் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கம் இவர்களை ஏற்க மறுத்தது. ஒத்துழைப்பு எதுவும் இல்லாததால் இவர்களால் எதற்கும் முடியவில்லை. புலிகளுடன் போர் செய்த இந்திய இராணுவம் தோற்று நாடு திரும்பியபோது, இந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் அவர்களுடன் ஓட்டிக் கொண்டனர். அப்படி ஓட்டிக் கொண்டவர்களில் வரதராஜப் பெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் அடங்குவர். இந்த அமைப்பின் மற்றொரு முக்கியஸ்தரான டக்ளஸ் தேவானந்தா முன்னரே அந்த அமைப்பில் இருந்து வெளியேறி இந்தியாவில் இருந்தார். அந்த அமைப்பைச் சேர்ந்த சாதாரண உறுப்பினர்கள் போக்கிடம் இன்றி அச்சத்துடன் வீடு திரும்பினர். இவர்களில் ஒரு பகுதியினர் புலிகளில் சேர, இன்னொரு பகுதியினர் வேறு நாடுகளுக்கு தப்ப, மிகுதியானோர் - கடத்தல், கொலை, காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் புலிகளால் தண்டிக்கப்பட்டனர். இவர்களில் ஒரு தொகையினருக்கு மரண தண்டனையும் நிறைவேற்றப்பட்டது.

பின்னாளில் இந்த அமைப்பின் பொதுச் செயலாளர் பத்மநாபா இந்தியாவில் வைத்தே கொல்லப்பட்டார்.

( 21 ஆம் பக்கம் பார்க்க)

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை




## மாவீரர் எழுச்சி

தாயக மண்ணுக்காக உயிர் நீத்த காவல் தெய்வங்களை நினைவேந்தும் மாவீரர் நாள் பற்றிய பதிவுகளை கடந்த வாரம் சமூகவலைத்தளங்களை நிறைத்திருந்தன.

மாவீரருக்கான அஞ்சலிகள், மாவீரர் நினைவுக் குறிப்புகள், மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர் நாள் ஏற்பாடுகள் என எல்லாம் மாவீரர் மயமாகின. மாவீரர் நாள் செயலிகள் பலவும் பகிரப்பட்டன. மாவீரரை நினைவேந்தும் கார்த்திகைப் பூக்களும் சமூகவலைத்தளங்களை நிறைத்திருந்தன.

மாவீரர் நாளிலும் மறுநாளும் மாவீரர் நாள் நினைவேந்தல் படங்கள், தகவல்கள் என்பவனவும் சமூகவலைத்தளங்களில் நிறைந்திருந்தன.




## தலைவன் பிறந்தநாள்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு அவரின் படங்களை அதிகம் பேர் பகிர்ந்தனர். தலைவனுக்கு வாழ்த்துப் போட்டு மகிழ்ந்தவர்கள் பலர் கேக் வெட்டியும் வெடிகள் கொளுத்தியும் மகிழ்ந்து அது தொடர்பான தரவுகள் படங்களையும் பகிர்ந்தனர்.

தலைவர் பிரபாகரனின் வசனங்களையும் பலர் பகிர்ந்தனர். குறிப்பாக பலரின் சுவர்களில் "பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே ..." பாடல் வரிகளை எழுதியிருந்தனர். மேலும் பல இடங்களில் கொண்டாடப்பட்ட தலைவரின் பிறந்தநாள் படங்கள், பதிவுகளும் சமூகவலைத்தளங்களை அலங்கரித்தன.




## புறக்கணிப்பு

இ.போ.சவின் வட பிராந்திய ஊழியர்கள் செய்த இருநாள் பணிப்புறக்கணிப்புப் பற்றி அதிகம்பேர் பிரஸ்தாபித்திருந்தார்கள். பஸ் சேவைகள் இல்லாமையால் எதிர்கொண்ட இன்னல்களை பலரும் பகிர்ந்திருந்தார்கள். கூடவே புறக்கணிப்பு தொடர்பான தகவல்களையும் நடக்கும் விடயங்களையும் உடனுக்குடன் தரவேற்றிக் கொண்டார்கள்.


பரீட்சை நேரத்தில் இ.போ.சவினர் செய்த இந்தப் பணிப்புறக்கணிப்பு குறித்துப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டிருந்தார்கள். கூடவே பஸ்ஸுக்காக காத்து நிற்கும் மக்கள், ஏற்றமுடியாமல் மக்களை ஏற்றிச் செல்லும் மினிபஸ்களின் படங்களை பதிவிடவும் சமூகவலைத்தளத்தினர் தவறவில்லை.















கணவன் : எவ்வளவு தடவை நான் உனக்கு சொல்லிருக்கேன், சமைக்கும் போது மொபைல் போன யூஸ் பண்ண வேண்டாம்னு? இப்ப பாரு இந்த ரசத்துல உப்பும் இல்ல, புளியும் இல்ல.

மனைவி : எவ்வளவு தடவை நான் உங்களுக்கு சொல்லிருக்கேன், சாப்பிடும் போது மொபைல் போன யூஸ் பண்ண வேண்டாம்னு? நீங்க ஊத்தி சாப்பிடறது ரசம் இல்ல, பக்கத்துல வச்சிருந்த தண்ணி.

கணவன் : 😢😢😢😢😢 11:19 A.M.



கணவன்: எவ்வளவு தடவை நான் உனக்கு சொல்லியிருக்கேன், சமைக்கும்போது மொபைல் போன யூஸ் பண்ண வேண்டாம்னு? இப்ப பாரு இந்த ரசத்துல உப்பும் இல்ல, புளியும் இல்ல.

மனைவி: எவ்வளவு தடவை நான் உங்களுக்கு சொல்லியிருக்கேன், சாப்பிடும்போது மொபைல் போன யூஸ் பண்ண வேண்டாம்னு? நீங்க ஊத்தி சாப்பிடறது ரசம் இல்ல; பக்கத்துல வச்சிருந்த தண்ணி.

கணவன்: 😢😢😢😢😢

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## மீள வரும் பண்பாடு

இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்யும், அன்பளிப்பு செய்யும் பண்பாடு மீளவும் வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. இயற்கை அழிப்பும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் மனித சமூகம் இப்போது உணரத் தொடங்கியிருக்கிறது. அதன் விளைவே இந்த பண்பாட்டின் மீட்சி எனலாம்.

எமது முன்னோர்கள் இயற்கைக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்கியிருந்தார்கள். அதனால்தான் அவற்றைத் தெய்வங்களாகவும் வணங்கி வருகின்றனர். இந்தப் பண்பாட்டின் நீட்சி இன்றும் தொடர்கின்றது. ஆனாலும் மூலமான இயற்கையை அழிப்பதில் பெரும் ஈடுபாடு காட்டுகிறோம். மனிதர்களுக்கு முதலிடம் - மனிதர்களின் விருப்பம், வசதி, தேவைகளுக்கே முதலிடம் என்று இயற்கையை வஞ்சித்து நிற்கிறோம். இதனால்தான் இயற்கையும் அவ்வப்போது பேரிடர்களை ஏற்படுத்தி மனிதனையும் வஞ்சிக்கிறது.

நாம் இயற்கையை நேசிக்கத் தவறியதன் விளைவு பலவற்றை இழந்து விட்டோம். இயற்கையின் நேசிப்பு ஆரம்பம் மரநடுகை எனலாம். மரங்கள் தெய்வங்களாக - தெய்வங்கள் உறையும் இடமாக எண்ணி வழிபாடியற்றியமையால்தான், நம் முன் தலைமுறைகள் இறந்தவர்களின் நினைவாக மரங்களை நாட்டியன. அந்த மரங்கள் வளர்ந்து கொடுக்கும் பயன்களை அவர்களே தருவதாக நம்பியது. நிலைத்து நிற்கும் அந்தப் பெருமரங்கள் இறந்த உறவு எம்மை விட்டுச் செல்லவில்லை என்ற நினைவைத் தருவதாகக் கருதினர். இதனால்தான் இறந்தவர்கள் நினைவாக அவர்களுக்கு திதி கொடுக்கும்போது உறவுகளுக்கு மரங்களை அன்பளிப்பாகக் கொடுத்தனர். இவ்வாறு வழங்கப்பட்ட மரங்கள் பலன்களை அளிக்கும்போது அவர்களும் இறந்தோரை நினைவில் கொள்வர்.

இறந்தவர்களை சொந்தங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்காக முன்னோர்கள் கையாண்ட இந்தச் செயல் இடையில் எம்மை விட்டுப் போயிருந்தது. எனினும் விடுதலைப் புலிகள் மாவீரர் நாளில் துயிலும் இல்லத்தில் தீபம் ஏற்றும் உறவுகள் நினைவாக தென்னங்கன்றுகளை அன்பளிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியது. இதன்மூலம் எமது பண்பாடு மீளருப்பெற்றது. ஆனாலும் அவர்களின் அழிவுக்குப் பின்னால் நின்றுபோனது. இடையில் இறந்தவர்கள் நினைவாக தட்டுகளில் அவர்களின் பெயரைப் பொறித்து வழங்கிய பழக்கம் ஏற்பட்டது. ஆனாலும் இன்றைய உலகில் அது அவசியமற்றதாகி விட்டது.

இந்நிலையில்தான் மீண்டும் இறந்தவர்கள் நினைவாக திதி கொடுக்கும்போது மரங்களை அன்பளிப்பு செய்யும் பழக்கம் முளைவிட்டுள்ளது. இதுவே இன்றைய தேவையும். இந்தப் பண்பாட்டு மீட்சியைப் போன்று, தங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கைகளால் தங்கள் கைகளால் மரங்களை நாட்டும் பழக்கமும் மீட்டெடுக்கப்பட வேண்டியது அவசியம். நவீனங்கள் மலிந்து இயற்கைக்கு பற்றாக்குறை நிலவும் காலத்தில் இயற்கை மீதான பிரியத்தை - நேசத்தை வளர்த்தெடுக்க வேண்டியது அவசியம். இதுவே எமது சந்ததி நிலைக்கவும் வழிவகுக்கும். நம் முன்னோரின் - உறவுகளின் பெயரால் நம் சந்ததி தழைக்க மரங்கள் நடுவோம் - பண்பாட்டின் நீட்சியைப் பேணுவோம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

---

# அடக்க முடியாத எழுச்சி

- நோக்கன் -

எழுச்சி என்பது தானாகத்தோன்றுவது. அது திட்டமிட்டுச் செய்வதல்ல. இயற்கைகூடச் சில சமயங்களில் எழுச்சிப் படுவதுண்டு. ஒரு தனி மனிதனிடம் தோன்றும் எழுச்சி என்பது ஒரு சமூக எழுச்சியாக மாறிப் பின் அதுவே இனத்தின் எழுச்சியாகவோ அல்லது நாட்டின் எழுச்சியாகவோ மாறுவதாகத்தான் சரித்திரங்கள் சொல்லுகின்றன. நீதியான எழுச்சியும், நியாயமான எழுச்சியும் அணைபோட்டுத் தடுக்க முடியாத சுனமியாய் உருவெடுப்பதாகத்தான் கடந்த காலச் சம்பவங்கள் கட்டியம் கூறுகின்றன.

எழுச்சி பல வடிவங்களுக்கூடாக எழுவதாக அறிகிறோம். அது எழுத்துக்களுக் கூடாக எழுகிறது. பேசசுக்களுக்கூடாக எழுகிறது. நடவடிக்கைகளுக்கூடாக எழுகிறது. பல வழிகளும் தர்மம் எழுச்சி பெறுகிறது. இருந்தும் மானசீகமான அணைக்கவில்லை. மழை பெய்தது மக்களை நனைக்கவில்லை. மாறாக மக்கள் நடப்பதற்கு இதமாக பாதையை பதப்படுத்தியிருந்தது.

ஆங்காங்கே ஒலித்த எழுச்சிப் பாடல்கள் எம்மை முந்திய நினைவுகளில் மிதக்கச் செய்தன. முன்னெப் பொழுதும் இல்லாத உத்வேகம் மக்கள் மனதை நிரப்பிக் கொண்டிருந்தது. மக்களும் அணிவகுத்துக் கொண்டிருந்தனர். அவர் மனங்களும் அணிவகுத்திருந்ததை கண்டோம். மாசு

இத்தகைய மக்கள் எழுச்சியை மாசு படுத்தக் காத்திருந்த பச்சோந்திக் கூட்டத்தின் கனவுகள் தவிடு பொடியாகக் கண்டோம். இறப்புக்களின் வலி தெரியாதவர்கள் அவர்கள். இழப்பென்பது என்ன என்று கூடத் தெரியாத அவர்கள் தலைமைக்காகக் காத்திருக்கின்றனர். எப்படி முடியும்? மக்கள் அங்கீகாரத்தைப் பெறாது அரியணை ஏறத் துடிக்கும்



எழுச்சியென்பது திடீரெனத் தோன்றுவதல்ல. அதை வித்திட்டு வளர்க்கவேண்டும். சில நேரங்களில் தலை முறை தலை முறையாக, பரம்பரை பரையாக உருக்கொள்ளுவதாகக் கூட இருக்கலாம்.

அவற்றுள் மறுப்பிலும், இழப்பிலும் எழுகின்ற எழுச்சியானது எல்லைகளைக் கடந்து வியாபிக்கக் கூடியது. மடை திறந்த வெள்ளமாகப் பாயக்கூடியது. அத்தகைய எழுச்சியைத்தான் எமது சூழலில் நாம் அனுபவித்திருக்கிறோம். தலைமை இல்லை. வழி நடத்துவதற்கு யாரும் இல்லை. இது எனது உரிமை. எனக்குரிய கடமை என்று புறப்பட்ட மக்களை இயற்கை வழிநடத்தியிருக்கிறது. அரசியலும் அதன் பின்னணியும் இல்லாத ஒரு பெரு வெளியை நாங்கள் சந்தித்திருக்கிறோம். அந்தப்பெரு வெளியின் சுகத்தையும், சுதந்திரத்தையும் சுவாசித்திருக்கிறோம். நியாயத்தின் வழி நடத்தலாக அது நடைபெற்றிருக் கிறது. அரசும், அரசியல் உலகமும் வழி விட்டு நின்றது கூட நியாயத்தின் அடிப்படையிலே தான் என்று எண்ணத்தோன்றுகிறது.

ஒரு ஒழுக்கம் அங்கே இருந்தது. ஓங்கி ஒலித்த நியாயமான குரலுக்கு மக்கள் கீழ்படிந்த பக்குவத்தை கண்டோம். சுய நலமற்ற ஒரு கோரிக்கைக்காக மறைந்த மாவீரர்களை எண்ணி அவர்கள் ஆன்ம சாந்திக்காக நடந்த பிரார்த்தனை அது. பிரார்த்தனையில் என்ன நடக்குமோ அது நடந்திருக்கிறது. அனைவரும் பாகுபாடற்ற முறையில் தங்கள் தங்கள் உறவுகளை எண்ணியும், நேசித்தும் ஏற்றிய தீபங்கள் அனைத்தும் முழுமைபெற்று இருந்தன. தீபச் சுவாலைகள் பிரகாசமானதாக இருந்ததைக் கண்டோம். மாசற்ற சோதியாய் மலர்ந்திருந்தன தீபங்கள். திட்டமிட்ட அணியொன்றின் அணிவகுப்பு எப்படி இருக்குமோ? சுவாலைகளும் அப்படியே அணிவகுத்து நின்றதையும் கண்டோம். அவை அனைத்தையும் ஜீவனுள்ளவைகளா-கவே பார்க்க முடிந்தது. காற்று வீசியது. அது தீபத்தின் சுாவாலைகளை

அவர்களை மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? நியாயமான எழுச்சி கொண்ட மக்களை வழி நடத்துவதென்பது எத்துணை கடினமானது? நடந்து வந்த பாதையின் நீளம் என்ன? அகலம் என்ன? என்று ஒவ்வொரு விடயத்தையும் அறிந்திருந்தாலல்லவா தலைமை பற்றிச் சிந்திக்கலாம்.

பயணத்தில் முட்கள் எங்கு தைத்தன? கற்கள் எங்கே தாக்கின? நீருக்காக எங்கெல்லாம் அலைந்தோம்? எப்படிப் பெற்றோம்? எதிரி எங்கே எதிர் கொண்டான்? அவனை எப்படி நாம் எதிர்கொண்டோம்? இது அறியாதவர்களெல்லாம் தலைமை தாங்கத் துடிக்கின்றனரே?

கொள்கையோடு தமது கண்களை மூடியவர்கள் மாவீரர். ஆனால் அவர்கள் தங்கள் கண்களை மூடியதுபோல இதயத்தையும் மூடி இருப்பார்கள் என்றா எண்ணுகிறீர்கள்? ஒருபோதும் இல்லை. அவர்கள் சிந்தனையில் இன்னும் நம்பிக்கை இருக்கும். நம்பிக்கையைவிடப் போராடக் கூரான ஆயுதம் வேறென்ன உண்டு? அவர்கள் மனதில் எப்பவோ விதைக்கப்பட்ட வித்துகள் வேறூன்றி முளை விட்டு கிளைபரப்பும். அவை வளர்வது எமக்குத் தெரியாமலிருக்கலாம். வாழ்வது எமக்குத் தெரியாமல் இருக்கலாம். கிளை பரப்புவது எமக்குத் தெரியாமலிருக்கலாம்.

ஆனால் அது சமயத்தில் விருட்சமாகும். பூப்பூக்கும். காய் காய்க்கும். அவை கனியாகும். அப்போ உயிரினங்களெல்லாம் மகிழ்சியில் ஆரவாரப்படும். கூட்டாக அவை தமக்குரிய இருப்பிடத்தை அதில் தேடிக் கொள்ளும். அதில் கூடு கட்டும். முட்டை இடும். குஞ்சுகளைப் பெறும். அவற்றின் கனவுகள் நனவாகும். அங்கு ஒரு புதிய சரித்திரமும், வரலாறும் படைக்கப்படும். அவைதான் மாவீரர்களின் மறுபிறப்போ?


# செருப்புக்கு அளவாகக் காலை வெட்டுவதா?

அரசியல்வாதிகளிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். பரபரப்புக்காக எதையும் செய்தோ, சொல்லியோ தொலைக்காதீர்கள். மாவீரர் துயிலுமில்லங்களுக்கு தேவையான நிதியை, புலம் சமூகம் வழங்கத் தயாராக இருக்கிறது. உயிரியல் பூங்கா வேண்டுமானால் உங்களது சொந்தக் காணியிலோ, சீதனக் காணியிலோ அமைத்துக்கொள்ளுங்கள், பணத்தை அரசிடம் பெறுவதற்காகத்தான் இக்கோரிக்கையை முன்வைக்கின் றோம் என்று மாவீரரின் பெற்றோரின் காதில் பூவைக்காதீர்கள். காலுக்கு அளவாகத்தான் செருப்பு வாங்க வேண்டும். செருப்புக்கு அளவாகக் காலை வெட்டும் முயற்சிதான் உயிரியல் பூங்கா அமைக்கும் கோரிக்கை. இக்கோரிக்கையை வைக்கும் முன்னாள் அதிபரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவீரர் தொடர்பாக, ஒரு மாவீரரின் தந்தையான ஊடகவியலாளர் ஒருவருக்குத் தொலைபேசியில் வகுப்பு எடுத்திருக்கிறார். மாவீரர் தொடர்பான விடயங்களில் தனக்கு என்னென்ன தகைமைகள் உண்டு என நீண்ட விளக்கமளித்தார். தமிழில் ஒரு பழமொழி உண்டு 'பத்துப் பிள்ளை பெத்தவளுக்கு ஒரு பிள்ளை பெத்தவள் முக்கிக் காட்டினாளாம்.' மாவீரர் தொடர்பான விடயங்களில் அவர்களின் குடும்பத்தினர் சந்தித்த சிக்கல்கள், சிரமங்கள் எல்லாவற்றையும் நன்கு தெரிந்துகொண்டும் மக்கள் மன்றங்களில் குரல் கொடுத்து நீதிநியாயத்தைப் பெற்றுக்கொடுக்க இவரும் இவரால் மாகாணசபை உறுப்பினர்களாக மக்களுக்கு அறிமுகமான மூவரும் ஏன் முன்வரவில்லை? என்ற கேள்வி மக்கள் மத்தியில் உண்டு.

1.மூத்த போராளியான தினேஷ் மாஸ்ரர் என்பவர் கணேசபுரத்தில் ஒரு காணியை வாங்கினார். இந்த விடயத்தில் தற்போதைய மாகாண சபை உறுப்பினரான சு. பசுபதிப்பிள்ளை என்பவரும் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டுள்ளார். முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான காரைநகரைச் சேர்ந்த மச்சேந்திரராசா என்பவரிடமிருந்தே இக் காணிவாங்கப்பட்டது. அதில் ஒரு மாடி வீட்டை அமைத்தரர் தினேஷ் மாஸ்ரர், அத்திபாரம் போடவந்தவர்களிடம், 'நாளைக்கு நான் உயிரோடு இருப்பேனா தெரியாது. ஆனால், இந்தக் காணியின் பின்பக்கத்தால் புகை வண்டி எந்தக் காலத்திலாவது ஓடும். அதன் அதிர்வுகளைத் தாங்கக்கூடிய உறுதியான வகையில் அத்திபாரம் அமையவேண்டும்'என வலியுறுத்தினார். இந்த வீட்டின் பல்வேறு வேலைகளைச் செய்தவர்களும் இன்னமும் கிளிநொச்சியில் உள்ளனர். இறுதிப் போரில் தினேஷ்மாஸ்ரர் வீரச்சாவு எய்தினார். மீள்குடியமர்வின் போது தினேஷ் மாஸ்ரரின் மாமி ,இவ் வீட்டில் குடியேறினார். பொலிஸாரின் துணையுடன் சென்ற மச்சேந்திரராசா தினேஷ் மாஸ்ரரின் மாமியாரை வீட்டை விட்டு விரட்டிவிட்டு அதனை அபகரித்துள்ளார். 'நான் தினேஷ் மாஸ்ரருக்கு இந்தக் காணியை விற்கவேயில்லை. வீடு கட்டியதும் எனது சொந்தக் காசில்தான்' என்கிறார் மச்சேந்திரராசா. இயல்பிலேயே மகா கருமியான ,இவர் இந்த வீட்டை இவ்வளவு காசு செலவு செய்து கட்டினாரா என்று உண்மை தெரிந்த கிளிநொச்சி மக்கள் கேட்கிறார்கள். இந்த மண்ணுக்காக மடிந்த தினேஷ் மாஸ்ரரின் மனைவி ஜனாகியின் நிலையைக் கண்டும் மனம் இரங்காத ,வர், செய்த பாவம் தீர கோயில் கோயிலாக அலைந்து திரிகிறார். இந்தப் பாவங்கள் சாபங்கள் தனது பரம்பரைக்குச் சேரும் என்பதால் அதனைக் கரைக்க இவ்வாறு முயற்சி செய்கிறார்: 'மனிதர்களுக்கு அன்பு செய்யத்தான் தெரியவில்லை. பக்தி செய்வது ரொம்ப சௌகரியமாக இருக்கிறது. சுயநலமுடையவர்களுக்கு அன்பு என்றால் என்னவென்று தெரியமுடியாது. அவர்கள் அன்பையும் அன்புடையவர்களையும் அலட்சியப்படுத்தி விடுகிறார்கள்.

அதன் விளைவுகள், வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களால் உள்ளுறுத்தலை ஏற்படுத்தி விடுகின்றது. அந்தக் குற்ற உணர்வை மறைத்துக் கொள்ளத்தான், இவர்களுக்குப் பக்தி தலைவிரித்து ஆடுகிறது."- இவ்வாறு கல்யாணமாலை என்னும் நூலில் இடம்பெற்றுள்ள"நம்பமாட்டாளே" என்ற தலைப்பிலான கதையில் ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளார். காணியை வாங்கிய விடயத்தில், சம்பந்தப்பட்ட மாகாண உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையிடம் விபரங்களைக் கேட்டறிந்து கொண்டனர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர். நிதர்சனப் பொறுப்பாளராக விளங்கிய சேரலாதன் கிளிநொச்சியில் சமாதான காலத்தில் காணியொன்றை வாங்கினார். இக் காணியில் சேரலாதனின் அன்னை சிறிய வீடு அமைத்தார். காணி விற்றவரின் அடியாட்கள் வந்து அதனைப் பிடுங்கி எறிந்தனர். மாவீரர் செயற்பாட்டுக் குழுத் தலைவரான சு.பசுபதிப்பிள்ளை இவ்வாறான விடயங்களைத் தெரிந்தும், மாகாண சபையில் மௌனமாக இருந்து விட்டார். பக்கத்தில் இருந்த உறுப்பினர் யாரோ இவரது வாயைப் பொத்தி விட்டார்கள் போல இருக்கின்றது. ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக் காணி தொடர்பாக முதலமைச்சருக்கு எதிராக முழங்கித் தள்ளிய இந்த மாவீரர் செயற்பாட்டுக் குழுத் தலைவரின் விஷமத்தனமான மௌனம் அநீதிகளுக்கு துணைபோ-கிறது.

பணத்துக்கு வாங்கிய காணிகள் மட்டுமல்ல மாவீரர் குடும்பத்தினரின் பரம்பரைக் காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன.. யாழ். நாயன்மார்க்கட்டு ராஜேஸ்வரி-ராமநாதன் வீதிகள் சந்திக்கும் இடத்தில் பொட்டம்மான் குடும்பத்தினருக்குச் சொந்தமான வீடு ஒன்று உள்ளது . இது பொட்டம்மானின் சகோதரி ஒருவருக்கு சீதனமாக வழங்கப்பட்டது. இந்த வீட்டின் ஒரு அறையில் பொட்டம்மானின் இரண்டாவது அண்ணன், சிவஞானகுமார் ஜேர்மனியிலிருந்து இலங்கை வந்த சமயங்களில் தங்குவதுண்டு.




இந்த வீட்டை படையினரின் ஆசீர்வாதத்துடன் ஒரு குடும்பம் கைப்பற்றியுள்ளது. படையினரின் துணை இவர்களுக்கு இருப்பதால், அப் பகுதியே இவர்களுக்கு அஞ்சுகிறது.. வீட்டை ஆக்ரமித்தவர்களுக்கு அதன் ஒரு அறையில் உரிமையாளரின் சகோதரன் வந்து தங்குவது பிடிக்கவில்லை. அதன் விளைவாக இறுதியாக அவர் இலங்கைக்கு வந்த சமயம் அடிக்கடி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அதன் விளைவாக ஏற்பட்ட மன அழுத்தம் வீதியில் அவரை மரணமடைய வைத்தது. பொட்டு( சண்முகநாதன் சிவசங்கர்) குடும்பத்தினருக்குச் சொந்தமாக களகரத்தினம் வீதியிலும் ஒரு பரம்பரைக் காணி உள்ளது. அதையும் படையினரின் இன்னொரு விசுவாசி அபகரித்துள்ளார். படையினர்தான் தன்னை இங்கு இருக்கச் சொன்னதாகவும், தான் காணியை விட்டு செல்லப் போவதில்லை எனவும், வீட்டை ஆக்கிரமித்தவர் கூறுகிறார். இந்த இரு வீடுகளுக்கும் காணிச் சொந்தக்காரர்கள் அனுமதி இன்றியே இலங்கை

( 18 ஆம் பக்கம் பார்க்க)



# புதுவிதி நடத்தும் பரிசு மழை போட்டி - 01 -

## இரண்டாவது சுற்றின் மூன்றாம் பரிசுக்கான கேள்வி

**1. இலங்கையின் மிக நீளமான புகையிரத பாதை எது ?**

**2. விடுதலைப் புலிகளின் முதல் இஸ்லாமிய மாவீரர் யார் ?**

**3. அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி யார் ?**

**4. இராணுவ பதவிநிலையில் மிக உயர்ந்த பதவி எது ?**

01. ..............................

02. ..............................

03. ..............................

04. ..............................

### போட்டிக் கூப்பன்

போட்டி : முதலாம் சுற்றின் முதலாம் பரிசு

பெயர் : ..............................

முகவரி : ..............................

தே.அ.அ.இல : ..............................

பாடசாலை : ..............................
(மாணவராயின்)

தொலைபேசி இல : ..............................

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 09.12.2017**

**போட்டி விதிமுறைகள் :-**

- ✓ விடைகளை மேலே தரப்பட்ட கூப்பனில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
- ✓ புதுவிதி/சகோதர பத்திரிகையின் பணியாளர்கள், உறவினர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- ✓ பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் தங்கள் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் அவசியம்.
- ✓ குலுக்கல் முறையிலேயே பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.



**அனுப்ப வேண்டிய முகவரி**

**புதுவிதி**
**கரடிப்போக்கு சந்தி,**
**கிளிநொச்சி.**

**உங்கள் அருகில் உள்ள முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் சேர்ப்பிக்க முடியும்**

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

– வல்வை ரவி –

(தொடர் 14)



# காங்கேசன்துறை

ஈழத்தின் பழம்பெரும் பட்டினங்களுள் ஒன்றாக விளங்குவதும் வரலாற்றுச் செய்திகள் நிறையப் பெற்ற தேசமாகவும் துறைமுகமாகவும் திகழ்வது காங்கேசன்துறையாகும். இது இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய துறைமுகத்துடன், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மிகப் பெரிய தொழிற்சாலையும் அமைந்த மிக முக்கியமான சிறு நகரமாகும். இலங்கையின் மிக நீண்ட புகையிரத சேவையான (256 மைல்) கொழும்பு - காங்கேசன்துறை சேவை 1990 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டு தற்போது இயங்கி வருவது யாவரும் அறிந்ததே.

யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு விமான நிலையமான பலாலி விமான நிலையமும் வரலாற்று, சமய முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலையும் இதன் அருகிலேயே அமைந்துள்ளன. காங்கேயன் + துறை - காங்கேசன்துறை. இதன் வடக்கே பாக்கு நீரிணைக் கடல், தெற்கே மாவிட்டபுரம், கிழக்கே மயிலிட்டி, மேற்கே கீரிமல்ல என்பனவும் எல்லைகளாக அமைந்துள்ளன. மாருதப்புரவீக வல்லி எனும் சோழநாட்டு இளவரிசி தன் குதிரை முகம் நீங்கியதன் கைமாறாக மாவிட்டபுரத்தில் கோவில் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களை தந்தையாகிய சோழ மன்னனிடமிருந்து வருவித்தாள். அப்பொருட்களை காங்கேயன் என்பவன் கப்பலில் கொண்டு வந்து கசாத்துறை என்ற இடத்தில் இறக்கினான். இதுவே காங்கேயன் வந்திறங்கிய துறையாகையால் இது அன்று முதல் காங்கேயன்துறை என அழைக்கப்படலாயிற்று என யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் கூறுகின்றது.

இந்து சமயத்தில் முருகனுக்கு காங்கேயன் என்றும் பெயருண்டு.



போர்த்துக்கேயரின் அழிவடைந்த கோட்டை

எனவே காங்கேயனது திருவுருவச் சிலை கொண்டு வந்து இறக்கப்பட்ட துறை என்பதால் காங்கேயன்துறை என்ற பெயரையும் பெறுவதாயிற்று (மாவிட்டபுரம் கோயிலுக்கு)

மாங்கெல்லை, தையிட்டி முதலிய பல குறிச்சிப் பெயர்களும் இங்கே வழக்கில் இருக்கின்றமையைக் காணலாம்.

நாவலந்தீவு என்றழைக்கப்படும் ஜம்புல்லைத் தீவிலேயே இப்பட்டினம் அமைந்துள்ள மையால் சம்புத்துறை எனவும் நாவல் என்றால் ஜம்பு என்றும் சிங்களத்தில் கூறப்படுவதால் ஜம்புகோளப் பட்டினம் என்று தமிழ் நூல்களும், பாளி நூல்களும் அழைத்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் இன்றைய வலிகாமப் பகுதி முன்னர் ஜம்புத்தீவு என அழைக்கப்பட்டது. ஜம்புத்தீவு என்றால் நவாலந்தீவு எனலாம். தீவு என்ற பெயருக்கேற்ப வலிகாமம் முன்பு நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்தது. கிழக்கே உப்பாற்றையும் தொண்டை மானாற்றையும் பிரித்து கால கதியில் ஓர் நிலமேடு தோன்றியது. இந்நாவலந்தீவிலேயே ஜம்புகோளப் பட்டினம் என்ற துறை உள்ளது. இத்துறைமுகம் யாழ்ப்பாணத்தில் உள்ள திருவடிநிலைக்கு சிறிது தூரத்தில் இருக்கின்றது. இத்துறைமுகம் சிறந்த வாணிப நிலையமாக விளங்கியது. இலங்கையில் கிடைத்த பொருட்கள் மட்டுமின்றிக் கீழைத்தேச , மேலைத்தேச வாணிபப் பொருட்களும் சேர்ந்து ஒரு பண்டமாற்று வாணிப நிலையமாக விளங்கியது.

மேலும் சம்பில்துறை வலிகாமத்தில் அமைந்துள்ள ஊராகும். அதனுடன் காங்கேசன்துறையின் பெயர்கள் இணைத்து நோக்கப்பட வேண்டியவை. சம்புகோவலாம், ஜம்புகோளம், சம்புகள், ஜம்புகோளப்பட்டினம், ஜம்புத்துறை என்பவையே அவையாகும்.

காங்கேசன்துறையின் பழைமை கி.மு. மூன்றாம் நூற்றாண்டுடன் இணைந்தது. இந்திய மௌரிய மன்னன் அசோகன் புத்த சமயத்தை இத்தீவில் பரப்பும் நோக்குடன் தன் மகள் சங்கமித்தையை வெள்ளரசுக் கிளைகளுடனும் பரிவாரங்களுடனும் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் இத்துறைமுகத்தில்தான் வந்திறங்கினார்கள். பின்னர் தரைமார்க்கமாக அநுராதபுரத்தை சென்றடைந்தனர். அவர்களைத் தேவநம்பிய தீச மன்னன் வரவேற்று (துறையில் வைத்து) வெள்ளரசுக் கிளை ஒன்றை சம்புகோளத்தில் நாட்டினான். அதன் அருகே திசமாக விகாரை என்ற பௌத்த பள்ளியை கட்டுவித்தான். இதன் அழிபாடுகள் சம்பில்துறை திருவடிநிலை பகுதியில் காணப்படுகின்றன. மேலும் இச்சம்புத்துறையிலிருந்தே தேவநம்பிய தீசனால் அசோக மன்னனிடம் அனுப்பப்பட்ட தூதுவர்கள் மரக்கலம் ஏறிச் சென்றனர். இத்துறைக்கும் இந்தியாவின் தாம்ரலிப்தி துறைமுகத்துக்கும் கடல் வாணிபத் தொடர்புகள் இருந்து வந்தன. இவ்வாறாகப் பழைமை வாய்ந்த தேசமாகக் ஜம்புகோளப் பட்டினம் காணப்படுவது யாவரும் அறிந்ததே. குறிப்பாக ஈழத்தின் வடபகுதியின் பழைமையான மண் வாசனை மணக்கும் தேசங்களுள் காங்கேசன்துறைக்கும் முக்கிய இடமுண்டு.



சிமெந்து தொழிற்சாலையின் இன்றைய நிலை



காங்கேசன்துறை கப்பல் துறைமுகம்

# வாரப்பலன்

### மேடம்
சூரியனின் பார்வை இருப்பதால் தடைகள் நீங்கும். சமூகத்தில் பதவி அந்தஸ்தில் இருப்பவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். புதன் சாதகமாக இருப்பதால் சமயோசிதமாக சிந்தித்து செயற்படுவீர்கள். சகோதரர்கள் உங்களை புரிந்து நடப்பர்.

### ரிஷபம்
தன ஸ்தான பலமிருப்பதால் பணத் தேவைகள் பூர்த்தியாகும். சூரியன் சாதகமாக இருப்பதால் நல்ல வீடு அமையும். மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் நலமடைவார்கள். கடல் கடந்து செல்வதற்கான விசா கை வந்து சேரும்.

### மிதுனம்
மாற்றங்களினால் ஏற்றம் வரும். வாங்கிய கடனை அடைப்பீர்கள். ராசியை புதன் பார்ப்பதால் உற்சாகமாக செயற்படுவீர்கள். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. இடமாற்றங்கள் சற்றுத்தள்ளிப்போகும்.

### கடகம்
செவ்வாய் சாதகமாக இருப்பதா பெண்கள் விரும்பிய ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். தொழிலில் லாபம் உண்டு. பிரயாணம், கொமிஷன், கொன்ட்ராக்ட், வீடு , நிலம் வாங்கி விற்கும் தொழில் லாபகரமாக நடக்கும்.

### சிம்மம்
சூரியன் பலமாக இருப்பதால் குதூகலம் மனநிறைவு உண்டு. சுக்கிரன் அருளால் பண வரவு, பொருள் சேர்க்கை உண்டு. குடும்பத்தில் பிரிந்து இருந்தவர்கள் சேருவார்கள். தாயார் மூலம் மருத்துவச் செலவுகள் வந்து நீங்கும்.

### கன்னி
ராசியில் செவ்வாய் இருப்பதால் மனக் குழப்பம், எதிரான எண்ணங்கள் தோன்றி மறையும் சகோதரருடன் வீண் வாக்கு வாதம் வேண்டாம். சுக்கிரன் சொந்த வீட்டை பார்ப்பதால் பெண் மூலம் லாபம், சந்தோஷம் உண்டு.

### துலாம்
வரவு, செலவு, அனுகூலம், அலைச்சல், மகிழ்ச்சி, சோர்வு என கலவையான பலன்கள் இருக்கும். புதன் பாக்கிய ஸ்தான த்தைப் பார்ப்பதால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கதவைத் தட்டும். பெண்களுக்கு தாய் வீட்டிலிருந்து சொத்து, பணம், நகை வந்து சேரும்.

### விருச்சிகம்
குருவின் பார்வையால் நீண்ட நாள் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். மருத்துவச் செலவுகள் பெருமளவு குறையும். ஒரு சொத்தை விற்று வேறு சொத்து வாங்குவீர்கள். சுக்கிரன் அருளால் குழந்தை பாக்கியம் உண்டு. இல்லறம் இனிக்கும்.

### தனுசு
குருவும், செவ்வாயும் சாதகமாக இருப்பதால் மனக்குழப்பங்கள் மறையும். சுபநிகழ்ச்சிகளுக்கு அத்திபாரம் இடுவீர்கள். புதனின் பார்வை வலுவாக இருப்பதால் போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். மக்களிடம் இருந்து உதவிகள் கிடைக்கும்.

### மகரம்
செவ்வாய் பார்ப்பதால் சோர்வு நீங்கி உற்சாகமாக இருப்பீர்கள். சொத்துச் சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். சுக்கிரனின் பார்வை சாதகமாக இருப்பதால் பணப்புழக்கம் உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். முன்னேற்றம் உண்டு.

### கும்பம்
சனி நல்ல நிலையில் இருப்பதால் சுபப்பலன் உண்டு. குழந்தை பாக்கியம் உண்டு. புதன் சொந்த வீட்டைப் பார்ப்பதால் வராத பணம் வரும். வேலை சம்பந்தமாக நேர்முகத்தில் கலந்து கொண்டவர்களுக்கு சாதகமான செய்தி வரும்.

### மீனம்
யோகம் கூடிவருவதால் குடும்பத்தில் அன்பும், மகிழ்ச்சியும் உண்டு. குருவின் பார்வையால் கல்யாணப் பேச்சுவார்த்தை திருப்திகரமாக முடியும். செவ்வாய் அம்சம் காரணமாக சொத்தில் இருந்த வில்லங்கங்கள் நீங்கும். புது வாகனம் வாங்குவீர்கள்.

## கார்த்திகை 27 நிகழ்வுகள் 2017















புதுவிதி



# குட்டீஸ்...!

தொகுப்பு:
- ஏஜேஜி -

pathuvithi@gmail.com

தீய குணம் கொண்ட இராணியின் சாபத்தில் அன்னங்கள், இரவில் மனித உருவம் மீளப் பெற்று, காலையில் மீண்டும் அன்னங்களாக மாறிவிடுவார்கள். அப்படித்தான் அன்று மாலையும், 11 அன்னங்களும் இளவரசர்களாக மாறின. இளவரசி எலிஸாவுக்கு ஆனந்தமாக இருந்தது. தன்னைச் சுற்றிலும் 11 சகோதரர்களும், இளவரசனும் நிற்பது மகிழ்ச்சியை மாத்திரம் கொடுக்கவில்லை. ஒரு புதுப் பலத்தையும் கொடுத்தது. நன்றியோடு சுற்றி நின்ற பறவைகளைப் பார்த்தாள். அவள் சகோதரர்களைத் தேடிப் பிடித்து, அங்கு கொண்டு வந்து சேர்த்த அந்தப் பட்சிகளுக்கு, கண்களால் நன்றி கூறினாள்.

தமது சகோதரியின் விருப்பப்படி, அன்றிரவு மாயக்குளத்தில் 11 இளவரசர்களும் நீந்தினார்கள். இந்த நீச்சல் அவர்களது சாபத்தைப் போக்கும் என்று இளவரசி திடமாக நம்பினாள். தமது தந்தையைக் கைப்பொம்மையாக வைத்துக் கொண்டு, நாட்டை ஆட்டிப் படைக்கும் கெட்ட இராணியிடமிருந்து எப்படி இராஜ்ஜியத்தை மீட்கலாமென, மரத்தடியில் உட்காந்து எல்லோரும் ஆலோசித்தார்கள். தம் நாட்டுப் படைகளை கொடுத்து உதவத் தயாரென இளவரசன் கூறியபோது, எலிஸா குதூகலித்தாள்.

"இராணி சார்பாக ஒரு குழுதான் எதிர்த்துப் போராடும். பெரும்பான்மையானவர்கள் இராணியின் ஆட்சியை விரும்பவில்லை. எனவே தமது சிற்றன்னையின் ஆட்சியைக் கவிழ்ப்பது கடினமல்ல" என்று எலிஸாவின் சகோதரர்கள் ஏகோபித்த குரலில் கூறினார்கள்.

அயல் நாட்டு இளவரசன், தன் படைகளைத் திரட்டிக் கொண்டு, காலையில் அங்கு வந்து சந்திப்பதாகக் கூறி, தன் குதிரையில் ஏறிப் புறப்பட்டான். போகும்போது "வெற்றி நமதே" என்று இளவரசன் கூறிச் சென்றது எலிஸாவுக்கு பெரு நம்பிக்கையை அளித்தது.

பலரது நம்பிக்கைகளோடு பொழுது விடிந்தது. குருவிகள் கீச்சிட்டு, விடிகாலைப் பொழுதை வரவேற்றன. இலைகள் காற்றில் சலசலத்து, குருவிகளின் கீச்சீட்டுக்கு பக்கவாத்தியம் வாசித்தன.

கண்களைக் கசக்கிக் கொண்டு, சோம்பல் முறித்தபடி எலிஸா கண்விழித்த போது, எதிரே கண்ட காட்சி, அவளுக்கு ஆனந்த அதிர்ச்சியளித்தது. 11 சகோதரர்களும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவாகள் சூரிய ஒளி பட்டு அன்னங்களாக இன்று மாறவில்லை. எலிஸா நம்பியதுபோல, மாயக்குளத்து நீச்சல் தன் சகோதரர்களுக்கு உதவியுள்ளது அவளுக்குத் தெரிந்தது. நான் இனித் தனியன் இல்லை என்று சொல்லிக் கொண்டு, கால்போன போக்கில் அடர்த்தியான மரங்கள் ஊடாக அவள் நடந்தாள். தன் தந்தையோடு சீக்கரம் சேரப்போகிறேன் என்று அவள் உள்மனது கூறியது.

திட்டமிட்டபடி அன்று இரவு அயல் நாட்டு இளவரசனின் படை அன்று எலிஸாவின் இராச்சியத்தை முற்றுகையிட்டது.



## இளவரசியும் பதினொரு அன்னங்களும்

அங்கம் 5

11 இளவரசர்களையும் படை முன்னே கண்டதால், எதிர்ப்பு பெரிதாக இருக்கவில்லை. கெட்ட இராணி சிறைப் பிடிக்கப்பட்டாள். அன்றே பொதுமக்கள் முன்னிலையில் சிரச்சேதம் செய்யப்பட்டாள். கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தார்கள். அயல் நாட்டு இளவரசனை மணந்தாள் எலிஸா.

நோயாளியாகி விட்ட தன் தந்தையின் விருப்பப்படியும், தன் சகோதரர்களின் அன்பு வேண்டுகோளுக்காகவும், அவளே இராணியாக முடி சூட்டப்பட்டாள். 11 சகோதரர்களும் அவளுக்கு 11 அமைச்சர்களாகினர். அவள் ஆட்சியில் குடிமக்கள் மகிழ்சியோடும், மனநிறைவோடும் வாழ்ந்தார்கள்

-நிறைவு-

## வாரம் ஒரு பழமொழி

**நாயைக் கண்டால் கல்லைக் காணோம்**
**கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.**

பண்டைக்காலத்தில் அற்புத சிற்பங்கள் வடிக்கப்பட்டன. மாமல்லபுரம், தஞ்சை, காஞ்சி சிற்பங்கள் இதற்கு எடுத்துக் காட்டாக விளங்கின.


இங்கே ஒரு சிற்பி நாயின் உருவத்தை கல்லில் சிற்பமாக வடித்திருந்தான். அந்த சிற்பத்தை ஒருவன் மிகவும் ரசித்தான். அந்த சுவைஞனைச் சிற்பி கேட்டான் "என் சிற்பம் எப்படி? என்று, அதற்குச் சுவைஞன் சொன்ன பதில் 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம் கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்பதாக இருந்தது. அதாவது அதில் நாயைப் பார்த்தால் கல் தெரியவில்லை. கல்லைப் பார்த்தால் நாய் தெரியவில்லை.



## அறிந்து கொள்வோமே

1. கார் திருட்டில் முதலிடம் வகிக்கும் நாடு எது ?
2. சிரிக்க வைக்கும் வாயு எது ?
3. உலகின் முதல் எலெக்ரோனிக் கம்பியூட்டரின் பெயர் என்ன?
4. ரஷ்ய நாணயத்தின் பெயர் ?
5. உலகின் மிகப் பழைமையான மியூசியம் எது ?
6. ஒரு குதிரைத்திறன் என்பதன் மதிப்பு என்ன ?
7. முதலில் விமானத்தை கடத்தியவர்கள் யார் ?
8. ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் கம்பியூட்டர் எது ?
9. தண்டி யாத்திரை எதற்காக நடத்தப்பட்டது ?
10. தங்கத்தின் வேதியல் பெயர் என்ன ?

## வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



### பதில்கள்

1. அமெரிக்கா.
2. நைட்ரிக் ஒட்சைட்.
3. இனியாக்.
4. ரூபிள்.
5. ஆஸ்மோலியன்.
6. 746 வோல்ட்ஸ்.
7. சீனர்கள் (1948).
8. எட்சாக்.
9. உப்பு வரியை எதிர்த்து.
10. அயூரியம்.

# ஏன் ஐயப்பனை தர்மசாஸ்தா என்றழைக்கிறோம்?




புலியை வாகனமாகக் கொண்டு, தவக்கோலத்தில் சபரிமலையில் அமர்ந்து அருள் பாலித்துவரும் அருட்கடல் தான் ஐயப்பன். மகிஷி என்ற அரக்கியை வதம் செய்ய அவதரித்தவர். மற்ற கடவுளுக்கு மாலை போடும் பக்தர்களை விட ஐயப்பனுக்கு மாலை போடும் பக்தர்கள் அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். ஐயப்பனுக்கு தர்மசாஸ்தா என்ற பெயர் எப்படி வந்தது? அதற்குப் பொருள் என்று தெரிந்து கொள்வோம்.

சாஸ்தா என்ற வார்த்தைக்கு, உன்னத ஆட்சியாளர், கட்டளையிடுபவர், ஆள்பவர், மேலும் தவறு செய்பவரை தண்டிப்பவர் என்று அர்த்தம். முருகப் பெருமானை பிரம்ம சாஸ்தா என்று அழைப்போம். ஏனெனில், அவர் பிரம்மனுக்குக் கட்டளை இட்டவர். வீரபத்திரரை தக்ஷ சாஸ்தா என்பர். காரணம், அவர் தக்ஷ பிரஜாபதியை தண்டித்தார். ஹரிஹர புத்திரனை தர்ம சாஸ்தா என்று அழைக்கக் காரணம், அவர் தர்மத்தை நிலை நாட்டி ஆட்சி புரிகின்றார். தர்மம் என்பது மனித வாழ்க்கையின் ஆணிவேர். தர்மமானது ஒரு மனிதன் அறிவழியில் நடப்பதற்கான பாதையாக இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. ஒருவன் எப்போது தர்மத்தை நிலை நாட்டுகின்றானோ, அப்போது நல்ல செயல்கள் அனைத்தும் தானாக நடக்கும். கிருஷ்ணபரமாத்மாவும் கீதையில் இதைத்தான் சொல்கிறார். எங்கு தர்மம் அழிகிறதோ, நான் அங்கு வந்து தர்மத்தை நிலை நாட்டுவேன் என்றும் இந்தத் தர்மத்தால் தான், இன்று அகிலம் தழைத்து நிற்கிறது என்றும் கூறுவார்.

'ஒருவன் எப்போது தர்மத்தை நிலை நாட்டுகின்றானோ, அப்போது அந்த செயல், இந்த அகில உலகத்தையும் பாதுகாத்து, அவனையும் தெய்வீகமானவனாக்கு கிறது. நாளடைவில், இந்த தர்மம், அவனை தெய்வீகத்தின் பிரதிநிதியாக மாற்றுகிறது. இதுதான் தத்வமஸி. அந்த தர்மத்தை நிலைநாட்டும் பகவானாக இருப்பதால், ஐயப்பனை தர்ம சாஸ்தா என்று அழைக்கின்றோம்.

## ஆன்மீகம் அறிவோம்!


# நட்பில் இல்லை உயர்வும் தாழ்வும்



நபிகள் நாயகமும், தோழர்களும் ஒரு ஊருக்கு புறப்பட்டனர். வழியில் கூடாரம் அமைத்து தங்கினர். அன்று இரவு உணவுக்கு ஒரு ஆட்டை அறுத்து சமைக்கலாம் என்று நபிகளார் நண்பர்களிடம் கூறினார்.

நண்பர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டனர். ஆளுக்கு ஒரு வேலையாக செய்வதென முடிவு செய்து, வேலையைப் பகிர்ந்து கொண்டனர். நபிகளுக்கு மட்டும் எந்த வேலையும் கொடுக்கவில்லை. உடனே நபிகள் அவர்களை அழைத்து, நீங்கள் மட்டும் வேலையைப் பகிர்ந்து கொண்டீர்களே! எனக்கும் வேலை வேண்டாமா! நான் காட்டுக்குச்சென்று, அடுப்பு எரிக்க விறகு சேகரித்து வருகிறேன்" என்றார். நண்பர்களோ "நீங்கள் ஓய்வெடுங்கள். நாங்களே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறோம்" என்றனர். நபிகள் அவர்களிடம் "தோழர்களே! நீங்களே எல்லா வேலைகளையும் செய்து விடுவீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் அதை நான் விரும்பவில்லை. தோழர்களுக்கு இடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. தோழர்களை விட தன்னை உயர்வாக நினைப்பவனை இறைவன் நேசிப்பதில்லை. என்னை உயர்வாக கருதி தனிமைப்படுத்துவதை அவன் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறான்" என்றார். பின் விறகு சேகரிக்க புறப்பட்டார்.

# ஆண்டவரை நம்புங்கள் நடக்காததும் நடக்கும்



'இப்படி நடக்குமா?' 'அப்படி நடக்குமா?' என்ற சந்தேகம் தேவையில்லை. ஆண்டவர் மீது பாரத்தைப் போட்டு விட்டால் நடக்க வேண்டியது நன்றாக நடக்கும். ஒரு பாதிரியார், ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் நடத்தி வந்தார். ஆயிரம் குழந்தைகள் இருந்தனர். அன்று சமைக்க பொருட்கள் இல்லை.

"குழந்தைகள் சாப்பிட என்ன செய்வார்கள்?"

என பாதிரியார் வருந்தவில்லை. தேவனிடம் சென்றார். "தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் இருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிப்பவருமாய் இருக்கிறார்," என்ற வசனத்தை ஜெபித்துக் கொண்டே இருந்தார்.


சற்று நேரம் கழிந்தது. குழந்தைகள் வழக்கம் போல் தட்டுகளுடன் உணவறையில் அமர்ந்து விட்டனர். அப்போது சில லொரிகள் அங்கு வந்தன. அதில் இருந்து ஏராளமான உணவு பாத்திரங்கள் இறக்கப்பட்டன. அவை குழந்தைகளுக்கு பரிமாறப்பட்டன. என்ன ஏதென்று விசாரித்த போது, அவ்வூரில் நடக்க இருந்த ஒரு நிகழ்ச்சி திடீரென ஒத்தி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வரவிருந்த ஆயிரக்கணக்கானோர் வர இயலாத நிலை. எனவே, அவர்களுக்காக சமைத்த உணவு வீணாகி விடக்கூடாது என்பதால், இங்கு வந்து குழந்தைகளுக்கு கொடுத்ததாக வந்தவர்கள் கூறினர். ஆண்டவர் மீது பாரத்தைப் போட்டு விட்டால் நல்லதே நடக்கும்.

-காவலூர் ஞானம்-

# அசர வைக்கும் டென்னிஸ் ஆட்டம்


ஆளுக்கொரு ராக்கட். ஒரு பந்து. இரு விளையாட்டு வீரர்களையும் பிரிக்க ஒரு வலை. டென்னிஸ் விளையாட இவை போதும். கிரிக்கெட் விளையாட்டுக்கு எந்த விதத்திலும் சளைக்காமல் ஈடு கொடுக்கக்கூடிய விளையாட்டு டென்னிஸ் விளையாட்டு! அதே சமயம் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்கள் போல வேகத்திற்கும் விறுவிறுப்பிற்கும் இந்த விளையாட்டில் பஞ்சமே இருப்பதில்லை. கைகளுக்கும் கால்களுக்கும் என்று மட்டுமில்லாமல், முழு உடம்பிற்குமே நிறைய வேலை கொடுக்கும் விளையாட்டு இது. மின்னல் வேகத்தில் அடிக்கப்படும் பந்தை இலாவகமாக எதிர்கொண்டு தன் கையிலுள்ள ராக்கெட்டால் அடிப்பதும், அடித்த கையோடு படுவேகமாகத் திருப்பப்படும் பந்தை எதிர்கொள்வதும், சவாலான விடயம். ராக்கெட் இல்லாத டென்னிஸ் ஆட்டம்.



எதற்கும் ஒரு மூலம் உண்டல்லவா ? ஸஇந்த விளையாட்டு எப்படி, எங்கு ஆரம்பித்தது என்பதற்கும் ஒரு சரித்திரம் இருக்க வேண்டுமல்லவா? பிரான்ஸ் நாட்டு கிறிஸ்தவ துறவிகளின் மடத்திலேயே, இந்த விளையாட்டு ஆரம்பமாகி இருப்பதாக அநேகமான சரித்திர சான்றுகள் பகர்கின்றன. 12ஆம் நூற்றூண்டில் இந்தத் துறவிகள் இதை விளையாடியது உண்மைதான். ஆனால் அவர்கள் ராக்கெட் என்று சொல்லப்படும் மட்டை கொண்டு பந்தை அடிக்கவில்லை. தமது உள்ளங்கைகளைக் கொண்டே பந்தை அடித்துள்ளார்கள். 16ஆம் நூற்றாண்டில்தான், ராக்கெட்டுகள் இந்த விளையாட்டுக்களில் அறிமுகமாகியதோடு, டென்னிஸ் என்ற பெயரும் ஒட்டிக் கொண்டது.

ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்திலும் , பிரான்ஸிலும் இந்த விளையாட்டு , வெகு வேகமாக பிரபல்யம் அடையத் தொடங்கியது. அன்றைய காலகட்டத்தில் இங்கிலாந்தின் மன்னனாக இருந்த எட்டாவது ஹென்றி டென்னிஸ் விளையாட்டின் பெரிய விசிறியாக இருந்துள்ளார்.





டேவிஸ் கிண்ணத்துக்கான போட்டிகள், விம்பிள்டன் கிண்ணப் போட்டிகள், கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் என்று பல தொடர் மோதல்கள் டென்னிஸ் போட்டிகளை அலங்கரிக்கின்றன. இதில் 1877ஆம் ஆண்டு ஆரம்பித்த விம்பிள்டன் கிண்ணத்துக்கான போட்டிகளே தொன்மையானது.

விம்பிள்டன் டென்னிஸ், ஆல் இங்கிலாந்து கழகம்( All England Club) 1877இல் "சாம்பியன்ஷிப்" என்ற பெயரில் ஒரு டென்னிஸ் மோதலை ஆரம்பித்து வைத்தது. இது இங்கிலாந்தின் விம்பிள்டன் என்னும் இடத்திலேயே இடம்பெற்றுள்ளது. இதில் ஆண்கள் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். இந்தச் சுற்றுப் போட்டியில் 22 ஆண்கள் கலந்து கொண்டார்கள். இந்தப் போட்டிகளின் போது, எப்படியான விதிகளை அமுல்படுத்துவது என்ற விடயத்தில் திணறி இருக்கிறார்கள். தொடர்ந்த அடுத்த வருடத்தில் அலுவலக பிரிட்டிஷ் சாம்பியன்ஷிப் என்ற பெயரில், இந்தப் போட்டிகள் இடம்பெற்றுள்ளன. பெயர் "பிரிட்டிஷ்" என்றிருந்தாலும், இந்தப் போட்டிகளில் உலக நாட்டு விளையாட்டு வீரர்கள், விளையாட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1884இல் மகளிர் ஒற்றையர் ஆட்டம் அறிமுகப்படுத்தகப்பட்டது. அதே ஆண்டில் கனவான்களில் இரட்டையர் ஆட்டம் கொண்டுவரப்பட்டது. 1913இல் மகளிருக்கான இரட்டையர் ஆட்டமும், ஆணும் பெண்ணும் கலந்து ஆடும் ஆட்டமும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. 1937இல்தான், தொலைக்காட்சி, விம்பிள்டன் போட்டிகளை ஒளிபரப்ப ஆரம்பித்துள்ளது. 1994இல் ஆரம்பித்த, கட்டுமானப் பணிகள், விம்பிள்டன் அரங்கத்தை நவீனப்படுத்தும் முகமாக, கட்டங்கட்டமாக செயல்படுத்தப்பட்டன. புதிய மிலேனியக் கட்டடம் என்று அழைக்கப்பட்ட விள்ளயாட்டு அரங்கு, மேலதிக 728 பார்வையாளர்களுக்கு இருக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. கார்களின் மேற்கூரை திறந்து மூட வசதி கொண்டிருப்பதைப்போல, சென்டர் கோர்ட் என்று அறியப்படும், மத்திய விளையாட்டு அரங்கிற்கும் கூரை நிர்மாணிக்கப்பட்டு, 2009இல் திறப்பு விழாவாக, மே 17 அன்று , அப்போதைய பிரபல்யங்களான அன்டரே அகாசி, ஸ்ரெபி கிராபி, ரிம் கிளிஸ்டேர்ஸ், ரிம் ஹெஎர்மான் ஆகியோர் இந்தத் திடலில் விளையாடி இருக்கிறார்கள். திடல் இலக்கம் ஒன்று என்று அழைக்கப்படும் அரங்கில், 11,360 பார்வையாளர்கள், ஒரே நேரத்தில் உடகார்ந்து விளையாட்டைப் பார்க்க முடியும். இது புற்றரைகள் கொண்ட ஒரு விளையாட்டு திடலாகும். மத்திய திடல் 14,360 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியது. 100 மில்லியன் பவுண்டஸ் தொகை செலவிட்டு, 2009இல் இது புதுப்பிக்கப்பட்டது. திடல்3 அளவில் சிறியது. 2000 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியது. மிகத் தொன்மையான இந்த விம்பிள்டன் போட்டிகளில் விளையடுபவர்கள் குபேரர்களாகி விடுவதில் சிரமம் இருக்காது. 2017இன் ஒற்றையர் ஆட்ட சாம்பியனுக்கு கிடைக்கும் பரிசுப் பணம் 2.2 மில்லியன் பவுண்ட்ஸ். 2016ஐ விட, இத் தொகை 200,000 பவுண்ட்ஸால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2011இலிருந்து இன்று வரையிலான காலகட்டத்தில் இவர்கள் பரிசுத் தொகை இரட்டிப்பாகி இருக்கிறது........ டென்னிஸ் சுவாரஸ்யங்கள்

தொடரும்....





# குறையும் விலை எகிறும் விற்பனை நன்மை யாருக்கு?

**வா**க்கெடுப்புக்காகக் காத்திருக்கிறது மங்கள சமரவீரவின் கன்னி வரவு - செலவுத் திட்டம். வரவு - செலவு திட்டத்தை முன்வைத்ததும் ஊடகங்களுக்குத் தெரிவித்த விடயம் இதுதான் **"மதுசார வகைகளுக்கான வரி விதிப்பால் சட்டவிரோத மதுசார** வகைகளின் பாவனை அதிகரிக்கின்றன எனவும், இதுவரை காலமும் அமுல்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெற்ற இதுபோன்ற தீர்மானங்களை இம்முறை தவறிழைக்கப்படமாட்டாது. இதற்காக இம்முறை வரவு-செலவுத் திட்ட வாசிப்பில் மதுவரித் திணைக்களத்தால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும்."

இந்தக் கருத்து எமது நாட்டில் அமுல்படுத்தப்பட்டால் மதுசார பாவனையில் வீழ்ச்சியை ஏற்படுத்துவது சாத்தியமாகுமா? ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது நாட்டில் மதுசாரம் அருந்துபவர்கள் ஒப்பீட்டளவில் குறைவாகும். (முழு சனத் தொகையிலும் 20வீதம் ஆனோரே மதுசாரம் அருந்துகின்றனர்.) மதுசார பாவனையைக் குறைப்பதற்காக எமது நாட்டினுள் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களும் இதற்கு ஒரு காரணமாகும். இதனால் மதுசார உற்பத்தி நிறுவனங்களுக்கு ஏனைய நாடுகளைப்போன்று அவர்கள் எதிர்பார்க்கும் வியாபார மட்டத்தை அடையமுடியாமல் இருக்கின்றது. இதற்கான காரணமாக அமைவதும் செயற்படுத்தப்படும் போதைப் பொருள் தடுப்பு செயற்றிட்டங்கள் மற்றும் மதுசாரம் தொடர்பில் காணப்படும் சட்டங்கள் ஆகியவை ஆகும். இந்நிலைமை மக்களுக்கு மிகவும் சாதகமானதொன்றாகும். எந்தவிதத்திலும் மதுசார நிறுவனங்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை.

விசேடமாக நாட்டினுள் மதுசார பாவனையைக் குறைக்க செயற்படுத்தப்படும் சட்டங்களை, மதுசார நிறுவனங்களுக்குச்சாதகமாக மாற்றுவதற்கு குறிப்பிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள், அவர்களால் பயன்பெறும் சில அரச அதிகாரிகள் மற்றும் சில அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து இந்நாட்களில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மேலும், வரவு-செலவுத் திட்ட வாசிப்புக்களின் போதும் தொடர்ச்சியாக மதுசார நிறுவனங்களுக்கு சார்பாக செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மதுசார உற்பத்தி நிறுவனங்கள் 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தை இலக்கு வைத்து போலியான மற்றும் விஞ்ஞானபூர்வமற்ற சில தகவல்களை ஊடகங்களின் வாயிலாக மக்கள் மயப்படுத்திக்கொண்டு வருகின்றனர். இதனால் மதுசார பாவனையில் ஈடுபடாத பிள்ளைகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் என்கின்ற விசாலமான குழுக்களை இலக்கு வைப்பதும், இப்போது மதுசாரம் அருந்துபவர்களை மேலும் அதிகமாக அருந்தத்தூண்டுவதன் மூலம் நிறுவனத்தின் வியாபார இலாபத்தை அதிகரித்துக்கொள்வதே நோக்கம்.

மதுசார உற்பத்தி நிறுவனங்களால் முன்வைக்கப்படும் போலியான, விஞ்ஞானபூர்வமற்ற கருத்துக்கள் மற்றும் அதன் உண்மை நிலைமை என்பன கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**கருத்து-01**

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள சட்டங்களுக்கு அமைய மதுசார வகைகளின் விலை உயர்வால் கசிப்பு போன்ற சட்டவிரோதமான மதுபான வகைகளை அருந்துவோரின் அளவு 60வீதமாக காணப்படுகின்றது.

உண்மை நிலைமை: 15 வயதுக்கும் மேற்பட்ட இலங்கையர்களில் 17வீதமானோரை மதுபான பாவனையில் ஈடுபடுகின்றனர். இதன்படி எமது நாட்டில் 83வீதமாக ஆனவர்கள் மதுசார பாவனையில் ஈடுபடுவதில்லை. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாடு சிறந்த நிலையிலேயே உள்ளது. அதாவது, இலங்கையில் தனியாள் மதுபான பாவனை 3.7 லீற்றர்களாகும். அமெரிக்காவில் தனியாள் மதுபானப் பாவனை 10.94லீற்றர்களாக உள்ளது. இதுவே அவுஸ்ரேலியாவில் 11.94 லீற்றர்களாகக் காணப்படுகின்றது.

மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 6.5வீதமாக ஆனோரே சட்டவிரோத மதுசார பாவனையில் ஈடுபடுகின்றனர். மாறாக மதுசார நிறுவனங்களினால் முன்வைக்கப் படும் 60 வீதமாக என்கின்ற அளவு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அறிக்கையின்படி 8வீதமானோரே சட்டவிரோத மதுபான பாவனையில் ஈடுபடுகின்றனர். இத்தகவல்களின்படி நாட்டின் மதுசாரம் அருந்தும் சனத் தொகையின் 92 வீதமானோர் சட்டரீதியான மதுபான வகைகளையே அருந்துகின்றனர்.

**கருத்து 02**

செறிவுகூடிய மதுபான வகைகளை அருந்துவதனால் பாவனையாளர்களுக்கு நோய்களுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக ஏற்படுவதுடன் ஏனைய சமூக பிரச்சினைகளுக்கும் ஆளாகுவதனால் செறிவு குறைந்த பியர் போன்ற மதுசார வகைகளுக்கு அவர்களை உள்வாங்க வேண்டும்.

உண்மை நிலைமை: மதுபான பாவனையில் ஈடுபடாத பெருந்தொகையினர் (83வீதமானோர்) வாழும் இந்நாட்டில் அந்த அளவை தக்க வைத்துக்கொள் வதற்காகவும் சட்டங்கள் அமுல்படுத்தப்படவேண்டும். அதேவேளை இது தொடர்பிலான தீர்மானங்களும் மெற்கொள்ளப்பட வேண்டும். செறிவு கூடிய மதுபான பாவனையைக் குறைப்பதற்காக பியருக்கான வரியைக் குறைப்பதால் பாவனையில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை. குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பியர் பாவனைக்கு பழகும் விதம் அதிகரிக்கும். இதற்கு சிறந்த உதாரணமாக, 1996ஆம் ஆண்டு நிதியமைச்சராக இருந்த ஜி. எல். பீரிஸினால் இதேவாதம் முன்வைக்கப்பட்டு, அப்போதிருந்த விலையிலிருந்து பியரின் விலை 50வீதமாக ஆகக் குறைக்கப்பட்டது. அதன் பிரதிபயனாக, மதுபானம் அருந்துபவர் மத்தியில் மேலும் பாவனை அதிகரித்ததோடு, சட்டவிரோதமான கசிப்பு போன்றவற்றை அருந்துவதற்கு முற்படவில்லை. மறாக புதிதாக பியர் பாவனையை ஆரம்பித்த இளைஞர்களின் அளவு அதிகரித்தது. இவ்விடயம் 1996,1997ஆம் ஆண்டில் மதுவரித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தனியாள் மதுபான பாவனை 3.7 லீற்றர்களாகும். பியர் விலையைக் குறைப்பதை விடுத்து, மதுசார வகைகளின் விலையை அதிகரிப்பதன் மூலம் பாவனையாளர்களின் கொள்வனவு திறனை குறைப்பதன் வாயிலாக பாவனையாளர்கள் மத்தியில் பாவனையைக் குறைக்க முடியும். இதனால் சட்டவிரோதமான மதுசார வகைகளின் பாவனை அதிகரிக்கு மென எந்தவிதமான ஆய்வுகளும் இதுவரையில் எவராலும் முன்வைக்கப்படவில்லை.

**கருத்து 03**

சட்டரீதியான மதுபான வகைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் குறைவு என்பதால் சட்டவிரோதமான மதுசார வகைகளை நாடுகின்றனர். அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் சட்டரீதியான மதுபான வகைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்களை அதிகரிக்க வேண்டும்.

உண்மை நிலைமை: இக்கருத்தை விஞ்ஞானபூர்வமாக நோக்குவோமா யின் மேலே குறிப்பிட்டதுபோல இலங்கையில் 6 வீதம் - 8 வீதமானோரை சட்டவிரோதமான மதுசார பாவனையில் ஈடுபடுகின்றனர். மதுசாரம் அருந்தும் சனத் தொகையில் 92 வீதமானோர் சட்ரீதியான மதுசார பாவனையில் ஈடுபடுவோர் ஆவர்.

ஆகவே இதுவொரு வேடிக்கையான தர்க்கமாகவே உள்ளது. மதுசார பாவனையில் வீழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் அதனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை அதிகரிப்பதை விடுத்து சட்டங்களை உபயோகப்படுத்தி சட்டவிரோதமான விற்பனை நிலையங்களைக் கட்டுப்படுத்தவேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)





# சென்றிப் பெடியன் தவாண்ணை

- கானா பிரபா -

சிறுகதை

யாழ்ப்பாணம் ரவுணுக்கை சைக்கிள் கடை வச்சிருந்த வேலாயுதம் மாமாவுக்கு பெரிய வீடு, வளவு. ஊருக்குள்ளை ஒரு பெரிய அரண்மனை மாதிரியிருக்கும். எண்பத்தேழில இந்தியன் ஆமி வந்த கையோட வேலாயுதம் மாமா குடும்பம் கொழும்புக்குப் போய் அப்பிடியே கனடாவுக்குப் போயிட்டினம்.

சண்டை மூண்ட பிறகு இந்தியன் ஆமி காம்பாக வேலாயுதம் மாமா வீடு இருந்தது. இந்தியன் ஆமிக்காரர் போன கையோட பூட்டிக் கிடந்த வீட்டை இயக்கக்காரர் எடுத்திட்டினம். ஆனால் இயக்கப் பெடியள் அங்கே நிரந்தரமாகத் தங்குவதில்லை. இருந்திட்டு எப்பவாவது ட்றக்கில குவியலா வருவினம். ரெண்டு மூண்டு நாளிலை ஆக்களைக் காணேலாது. வெளி மாவட்டத்தில இருந்து சண்டைக்காக வாற பெடியள் எண்டு கந்தையா அண்ணை ஒருமுறை அப்பாவின் காதில் குசுகுசுத்தது கேட்டது.

வேலாயுதம் மாமா வீட்டில் ஒருத்தர் மட்டும் அங்கே நிரந்தரமாகத் தங்கியிருப்பார். அவர் தான் தவாண்ணை. எங்கட ஊர்ச் சனத்துக்குத் தான் அவர் சென்றிப் பெடியன் ஆனால் எனக்கு அவர் "தவாண்ணை" வேலாயுதம் மாமா வீட்டு வளவை மூடிக் கட்டிய பென்னம் பெரிய மதிலுக்கு மேல் இருந்து நோட்டம் விட்டுக் கொண்டிருப்பார் தவாண்ணை. கையில துவக்கு, இடுப்பைச் சுற்றிய சாரத்தை இறுக்கியிருக்கும் பெல்ட் கிரனேட் குண்டு பொருத்த வாக இருக்கும்.

ஒல்லி உடம்பெண்டாலும் கறுத்த புரூஸ்லீ மாதிரி இருப்பார் அவர். தவா அண்ணையோடு எப்படி எனக்குப் பழக்கம் வந்தது எண்டு யோசித்துப் பார்க்கிறேன். வேலாயுதம் மாமா வீட்டு வளவுக்குள்ள இருந்த வயிரவர் கோயில் எங்கட ஊர்ச் சனத்துக்குப் பொதுச் சொத்து மாதிரி. அப்பிடித் தான் நானும் கோயில் கும்பிடப் போற சாக்கில இயக்கப் பெடியளை விடுப்புப் பார்க்கப் போவேன். சாந்தன் அண்ணா என்னை விட ஐந்து வயது மூத்தவர். வேலாயுதம் மாமா வீட்டுக் காணியோட ஒட்டின ஒரே மதில்காரர். ஊர்க்காரரைக் கண்டால் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளாத தவா அண்ணை ஏனோ என்னிலும் சாந்தன் அண்ணையிலும் ஒரு நேசத்தை வைத்துக் கொண்டிருந்தார்.

சிநேகமாகச் சிரித்து விட்டுக் கடந்த காலம் போய். சாந்தன் அண்ணா வீட்டு விசேசங்களில் செய்யும் சாப்பாடு முதற் கொண்டு வைரவர் கோயில் புக்கை வரைக்கும் வாழையிலையில மடிச்சிக் கொண்டு போய் தவா அண்ணரோடு பங்கிட்டுச் சாப்பிடும் அளவுக்குப் பழக்கம் பிடித்து விட்டோம். பின்னேரமானால் மதிலில் இருந்து அலட்டிக் கொண்டிருப்பம். இந்த மூன்று பேர் கூட்டணியில் தவா அண்ணரை விட இரண்டு வயது இளையவர் சாந்தன் அண்ணா என்பதால் அவர்களுடைய கதைக்குள்ள நான் அதிகம் தலையிட மாட்டன். கேட்டுக் கொண்டிருப்பன்.

ஒரு நாள் சுப்பையா அண்ணை கண்டு என்னைக் கூப்பிட்டு விசாரித்தார். "எடேய் இயக்கப் பெடியனோட உங்களுக்கென்னடா சிநேகிதம் அவன் பாவி மடியில கட்டியிருக்கிற குண்டு வெடிச்சுக் கிடிச்சுப் போனால் என்ன செய்வியள்? என்று வெருட்டிப் பார்த்தார். சுப்பையா அண்ணை கவலைப்படுவதிலும் நியாயம் இருந்தது. இந்தியன் ஆமி வர, முந்தின காலத்தில ஒருமுறை சுதுமலைத் தோட்டத்தில இலங்கை ஆமி ஹெலியை இறக்கி நோட்டம் பார்த்தவன். அந்த நாள் தொட்டு எங்கட ஊர் முச்சந்தியில இரவு நேரம் இயக்கப் பெடியள் மாறி மாறி சென்றியில் நிப்பினம்.

"நானொரு சென்றி தாவடிச் சென்றி பாதை தெரியவில்லை இந்த ஊரும் புரியவில்லை" எண்டு எங்கட ஊர் அண்ணைமார் "நானொரு சிந்து காவடிச் சிந்து" சினிமாப்பாட்டை மாத்திப் பாடும் அளவுக்கு முச்சந்திச் சென்றிக்காறர் பிரபலமாகீட்டினம். அந்த முச்சந்தியில தான் வெட்டின சுரக்காய்க்குக் குங்குமம் போட்டு கழிப்புக் கழிக்கிறது. செத்த வீட்டு எட்டுச் சாப்பாடெல்லாம் அதில் தான் போடுறது. அந்தச் சந்தியைக் கடக்கும் போதே பயத்தில அங்காலை திரும்பிப் பார்த்துக் கொண்டு போகுமளவுக்குப் பயமான ஏரியா அது. ஆனால் இயக்கக்காரர் சென்றி போட்டதில இருந்து எல்லாருக்கும் பயம் தெளிஞ்சுட்டுது. கள்ளர் காடையர் கூட இரவில இனி வராயினம் என்று ஊர்ச்சனத்துக்குப் பெரும் ஆறுதல்.

ஆனால் ஒருநாள் இரவு நடக்கக் கூடாத ஒன்று நடந்திட்டுது. படார் என்ற சத்தம் கேட்டு ஊர் நாயெல்லாம் வாள் வாளெண்டு குலைக்குது. சனம் அரக்கப் பரக்க வீதிக்கு வந்துட்டுது. முச்சந்திப் பக்கமிருந்து தான் அந்தச் சத்தம் வந்தது. காவலுக்கு நின்ற இயக்க அண்ணையின் கிரனேட் க்ளிப் கழண்டு குண்டு வெடிச்சு ஆள் அந்த இடத்திலேயே பலியாம் ஊர்ச்சனத்துக்கு மெல்லக் கதை பரவி விட்டது. சுப்பையா அண்ணை முதற் கொண்டு ஊர்ச்சனமெல்லாம் இயக்கத்தைப் பய பக்தியோட பார்க்கத் தொடங்கி விட்டுது.

"தவாண்ணை உந்த கிரனேட் கிளிப் தவறுதலாக் கழண்டால் என்ன செய்வியள்?"

"அது வெடிச்சுச் செத்துப் போவன் ஆனால் சண்டையில சாகேல்லை எண்ட கவலை இருக்கும்" என்று சொல்லும்போது தவா அண்ணையை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருப்பேன்.

முற்றிக் கிடந்த பப்பாக் காயைக் கத்தியால் செதுக்கி கிரனைட் மாதிரிச் செஞ்சு தந்தார். பறித்திருந்த குருமணல் திட்டியில் அதை மாறி மாறி எறிந்து, தெறித்துப் பாயும் மண்ணைப் பார்த்துக் கை தட்டி ஆமிக் காம்புக்குக் குண்டு போட்டாச்சு என்று கை தட்டிச் சிரிப்போம். தவாண்ணை இயக்கத்தில் சேர்ந்த கதையைச் சிரித்துச் சிரித்துச் சொல்லிக் கொண்டிருந்தார் சாந்தன் அண்ணையிடம். நான் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன்: தன்னுடைய ஊர் கிளிநொச்சியாம். பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது இயக்கக்காரரைக் கண்டதும் இவருக்கும் இயக்கத்துக்குச் சேர வேண்டும், யூனிஃபோர்ம் போட வேணும், துவக்குத் தூக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் சண்டைக்குப் போகப் பயம். ஏன் காயப்பட்டு இறந்தவர்களைக் கண்டால் அதை விடப் பயப்பிடுவாராம்.

இயக்கக் காம்புக்குப் போய் அங்குள்ள பெரியாளிடம் "நான் இயக்கத்தில சேர ஆசை ஆனால் அரசியல் துறையில் சேர ஆசை" என்று சொல்லியிருக்கிறார். தவாண்ணையின் நினைப்பு அரசியல் துறையில் இருந்தால் சண்டை பிடிக்கத் தேவையிராது என்று அவராகவே எடுத்த தீர்மானம் அது.

"வாரும் தம்பி தாராளமா அரசியல் துறையில் இறங்கலாம்" என்று கொடுப்புக்குள்ளை சிரித்துக் கொண்டே வரவேற்றாராம் இயக்கத்தின் பெரியாள். தவாண்ணைக்குக் கொடுத்த முதல் பொறுப்பு சண்டையில காயப்பட்ட போராளிகளைப் பராமரிப்பது. அதுவரை காணாத காட்சியெல்லாம் கண்டாராம்.

ஒரு பக்கம் இடுப்புக்குக் கீழை ஒண்டுமே இல்லாமல் போர்வையைப் போர்த்துக் கொண்டு முனகிக் கொண்டிருக்கும் போராளி, கண் பக்கம் கட்டுப் போட்டு கொண்டு "ஐயோ அம்மா வலிக்குது" என்று கத்திக் கொண்டிருக்கும் இன்னொருவர், கையோ, காலோ இழந்து சுய நினைவின்றிப் படுத்திருக்கும் ஒரு கூட்டம், இவர்களையெல்லாம் கடந்து போரில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் பக்கம் வந்தால், கலங்கிய கண்களோடு அவர்களில் இலையான் மொய்க்காது பனையோலை விசிறியால் வீசிக் கொண்டிருக்கும் முந்த நாள் போருக்குப் போனவர்கள். இவர்களோடு இருந்து இரவிரவிரவாகப் பணிவிடை செய்தாராம்.

விடியக்காத்தால வந்த பொறுப்பாளரரின் போய்த் தவாண்ணை கேட்டாராம் "அண்ணை எப்ப பயிற்சி தொடங்குது?" என்று. முந்திய இரவு தவாண்ணைக்கு மன ரீதியான பயிற்சியைக் கொடுத்து விட்டது. மணலாறுக்கான சண்டைக்குப் போகும் அளவுக்குத் தவாண்ணை தேறி விட்டார். அடிக்கடி வெவ்வேறு கள முனைக்குத் தேவைப்படும்போது கூப்பிடுவார்களாம். சாந்தன் அண்ணை ஓ.எல். எடுத்த கையோட ஜேர்மனிக்குப் போய் விட்டார். தவாண்ணைக்குப் பேச்சுத் துணை நான் மட்டுமே.

"உங்களுக்கு வெளிநாடு போற ஆசை வரேல்லையோ தவாண்ணை"

"எனக்கிருக்கிற ஒரே ஆசை நான் சந்திக்கிற கடைசிச் சண்டைக்கு முன்னம் தலைவருக்குப் பக்கத்தில நிக்கோணும்" தவாண்ணையின் கறுத்த முகத்தில் ரோச் லைற் அடிச்ச மாதிரி மின்னியது அதைச் சொல்லும் போது.

பிள்ளையாரடி கொடியேறி விட்டுது. ஒவ்வொரு நாளும் திருவிழா போற சாக்கில கச்சானும், தும்பு முட்டாசும் சாப்பிடலாம் என்று நாக்கு சப்புக் கொட்டியது. பாதி சாப்பிட்டுக் குறைந்த கச்சான் சரையைக் கொண்டு வந்து தவாண்ணையிடம் கொடுத்தால் ஒன்றை உடைத்துக் கோதை வீசி விட்டு உள் பருப்பை ஆமிக்காரனைப் பார்ப்பது போலப் பார்த்துட்டு "என்ன இருந்தாலும் எங்கட வன்னிக் கச்சான் மாதிரி வராது, கொப்பேக்கடுவ மாதிரிக் கொழுத்ததுகள்" என்பார்.

பிள்ளையார் கோயில் தேருக்குத் தவாண்ணையைக் கொண்டு போய்க் காட்டுவம் என்று எனக்கு உள்ளூர ஆசை. கடும் கடவுள் பக்தி அவருக்கு. ஆனால் வருவாரோ மாட்டாரோ என்று சந்தேகம். தேர் அண்டு கேப்பம் என்று காத்திருந்தேன். சப்பறத் திருவிழாவுக்கு வெளிக்கிட்டுக் கொண்டு தவாண்ணையிடம் போனேன். வேலாயுதம் மாமா வீட்டில் ஒரு ட்றக் நிற்கிறது. இயக்க ஆட்கள் வந்தால் நான் தவா அண்ணையைத் தொந்தரவு செய்யாமல் ஒதுங்கி விடுவேன். நான் வந்துட்டுப் போறதைத் தவாண்ணை கண்டுட்டார்.

"தம்பி இஞ்ச வாரும்" என்று ஆசையாகக் கூப்பிட்டார். தயங்கித் தயங்கிப் போனேன். மற்றைய போராளிகளைப் போலத் தவாண்ணையும் யூனிஃபோர்ம் போட்டிருக்கிறார்.

"நான் அடிபாட்டுக்குப் போறன், வந்தால் சந்திப்பம் என்ன" தவண்ணை.


"அப்ப நாளைக்குத் தேருக்கும் கூட்டிக் கொண்டு போவம் எண்டு நினைச்சன்...." நான்.

பொக்கற்றுக்குள்ள கையை விட்டு இருந்த பத்து ரூபாத் தாளை எடுத்து என் கைக்குள் திணிக்கிறார். "தவாண்ணையை நினைச்சு தும்பு முட்டாசும், கச்சானும் வாங்கிச் சாப்பிடும், கண்ட கண்ட இனிப்புச் சாப்பிடாதையும் வயித்துக்குள்ள பூச்சி வரும்" தவாண்ணையின் கதை ஒண்டும் என்ர மூளைக்குள்ள ஏறுதில்லை. அவரைக் கோயில் திருவிழாவுக்குக் கொண்டு போகேல்லை என்ற ஏமாற்றம் தான் நிக்குது.

வேலாயுதம் மாமா வீடு பூட்டிக் கிடக்குது. அடுத்த நாள், அடுத்த நாள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறன். பிள்ளையார் கோயில் தேரடிப் பொங்கலும் வந்துட்டுது. கோயிலுக்குப் போய் விட்டு வீடு திரும்பும் போது வேலாயுதம் மாமா வீட்டுச் சுவர் முழுக்க நோட்டீஸ் ஒட்டியிருக்கு. எட்டிப் போய் அரை இருட்டில் பார்த்தால் தொப்பியோட தவாண்ணையின் படம்.

மேஜர் செம்பருதி" (தவச்செல்வன்) கோட்டை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் வீரச் சாவடைந்தார். அரசியல் துறை - யாழ்ப்பாணம் என்று போஸ்டரில் எழுதியிருக்கு. தவாண்ணையும் நானும் குந்தியிருக்கிற மதில் பக்கம் போய்ப் பார்த்தேன். நோட்டீஸ் எதுவுமில்லாமல் வெறுமையாகக் கிடக்குது

# அசலை அசத்தும் நகல்




அசலைப் போல நகல் இருப்பது இலேசுப்பட்ட விடயமல்ல. எப்படித்தான் அசலைப் போன்று இருக்க விரும்பினாலும், முடிவில், அட இது வெறும் நகல்தானே என்ற அலட்சிய மனப்பான்மை நம்மிடம் தொற்றி விடுவதுண்டு.

மனாபு கஸாக்கா என்ற பெயர் கொண்ட இந்த ஜப்பானியரிடம் உள்ள திறமை அனைவரையும் வியக்க வைக்கிறது. பிரபல்யமான விலையுர்ந்த, சுவிஸ் றொலெக்ஸ் கடிகாரமாகட்டும் அல்லது கஸியோ கைக்கடிகார மாகட்டும், அச்சொட்டாக அவற்றின் வடிவில், காகித அட்டை கொண்டு செய்வதில் இவர் படு கில்லாடியாக இருக்கிறார். இதற்கு இவர் கென்ட் அட்டை எனப்படும் பிரத்தியேக அட்டையை உபயோகிக்கிறார்.

இங்கிலாந்தின் கென்ட் மாகாணத்தில் இந்த அட்டை வருவதால்தான் இந்தப் பெயர். இந்த அட்டை பல சிறப்பம்சங்களைக் கொண்டதால், ஓவியர்களின் கலைத்திறமையை வெளிப்படுத்த , இது பெரிதும் கைகொடுக்கின்றது. கைக்கடிகாரத்தில் காணப்படும் மிகச் சிறு விவரங்களையெல்லாம், துல்லியமாக இந்த அட்டை கொண்டு உருவாக்கும் தன் கடிகாரங்களை, கடந்த 15 வருடங்களாகக் காண்பித்து, பார்ப்போரை மலைக்க வைக்கிறார் இந்த மனிதர்.

# குறையும் விரல்கள் ஏன் தெரியுமா?



அங்குசெல்பவர்களுக்கு பெருமையுடன் காட்டி வருகிறார்கள். இந்த மம்மி குறைந்த பட்சம் 370 வருடங்கள் முற்பட்டது. ஒரு எதிரியைக் கொன்றால், ஒரு மாலையை இந்த மம்மியின் கழுத்தில் அணிவிப்பது இவர்கள் வழமை. திருவிழாக்களில் காட்டுப்

குடும்ப உறுப்பினர் ஒருவரை இழந்து விட்டால் நாம் என்ன செய்வோம். ஒருநாள்...' இல்லை ஒருவாரம்... கூடியது 6 மாதம் அழுவோம்... துன்பப்படுவோம். அப்புறம் மனதைத் திடப்படுத்தி விடுவோம். ஆனால் இந்தோனேசியாவின் டனி இனத்தவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா...?! தங்கள் விரல்களில் ஒன்றை வெட்டிக் கொள்கிறார்கள்...

1938 இல் இந்தோனேசியாவின் பலீம் பள்ளத்தாக்கில் வசிக்கும் இந்த இனத்தவர்கள் பற்றி கண்டறியப்பட்டது. இப்பொழுது மார்க்கஸ் றொத் என்ற ஜேர்மனிய படப்பிடிப்பாளர், அவர்களுடன் ஒரு வாரத்தைக் கழித்ததில், பல சுவையான செய்திகள் கசிந்துள்ளன. ஒரு காலத்தில் இங்கு வாழ்ந்த போர் வீரனின் "மம்மி"யை

பன்றிகளைக் கொல்வது இங்கே பிரசித்தம். இவர்கள் மிக விலைவாக மதிப்பிடுவது பன்றியைத்தான். எனவே அரிதான விருந்தாளிக்கு உணவு அளிக்க, பன்றியைக் கொன்றே விருந்து படைக்கிறார்கள். நெருப்பில் வேக வைத்தே இறைச்சியை உண்கிறார்கள். ஆண்கள் ,பெண்கள் என்று வெவ்வேறு வீடுகளில்தான் வசித்து வருகிறார்களாம்.

பல பெண்கள் தம் பெருவிரல்கள் தவிர்ந்து ஏனைய கைவிரல்களுடன் காணப்படுவதைப் படம் பிடித்துள்ளார், இந்தப் படப் பிடிப்பாளர். உறவு முறையில் ஒருவர் இறந்து போனால், தங்கள் கைவிரல் ஒன்றைத் துண்டித்து விடுவார்களாம் இந்தப் பெண்கள். கணினி உலகத்தில் இப்படியும் சிலர் வாழ்கிறார்கள்.

## புதினப் பூங்கா


தொகுப்பு : ராஜேஸ் மணாளன்

வயிற்றுப் பசி போக்கும் உணவகங்கள், நம் வாழ்வில் இணைந்தவை . கிராமப்புற மக்களுக்கு அதன் அவசியமும், தேவையும் பெரிதாக இல்லையென்ற போதிலும், நகரப்புற வாழ்க்கையில், இது அத்தியாவசியமாகிவிட்டது.

இந்தோனேசியாவின் ஜாவா தீவிலும் ஒரு உணவகம் உள்ளது. கணவனும் மனைவியும் இணைந்து நடத்தும் இந்த உணவகத்தில் ஒரு விசேடம் இருக்கிறது. என்ன தெரியுமா? குப்பைகள் மலைபோல குவிந்து கிடக்கும் இடத்தருகே இந்த உணவகம் இருப்பதுதான் புதுமை, அதுமட்டுமல்ல கொடுக்கும் உணவுக்கு பணம் வாங்காதது இனனொரு அதிசயம்.

பணம் வாங்காமல், கோவில் பிரசாதம் போல இவர்கள் பிறருக்கு உணவளிப்பதன் மர்மம்தான் என்னவோ? என்ன அவசரம்? சொல்லத்தானே போகிறேன். பணம் இல்லாத உணவு என்றதும் , இலவசம் என்று நினைத்து விடாதீர்கள். இந்த உணவகத்தை நடத்தும் 56 வயதான சரமின் என்பவர், தன்னிடம் உண்ண

# கழிவுக்கொரு விலையும் காண்கின்ற உணவும்.




வருபவர்கள் வெறுங்கையோடு வந்தால் உணவளிக்க மாட்டார். இவர்கள் குப்பையிலிருந்து பொறுக்கி வரும் பிளாஸ்ரிக் இவர்களுக்கு உணவு போடுகின்றது. இவர்கள் பெறும் உணவு கொண்டுவரும் பிளாஸ்ரிக்கை விட பெறுமதி குறைவு என்றால், உணவோடு மேலதிக பணமும் கொடுபடும்.

# ஆணிகள் உடலில் விளைவதில்லை



இறுதியாக இந்த ஒக்ரோபர் மாதம் அவள் கால்களை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தபோது, ஆணிகள், ஊசிகள், சிரிஞ் ஊசிகள் உட்பட 70 உலோக ஊசிகளைக் கண்டெடுத்துள்ளார்கள் மருத்துவர்கள்.

இந்தியப் பெண்ணாண் அனுசூரியா (வயது 35)என்ற பெயர் பெயர் கொண்ட அவளது இரண்டு கால்களிலும் முழந்தாள் வரையில் ஆணிகள் . இவைகள் எப்படி உள்ளே புகுந்தன என்று அவளுக்கு தெரியாதாம். நீண்ட காலமாக மரண வேதனை அனுபவித்து வந்த இவளுக்கு, மருத்துவர்களும் சிகிச்சை அளித்து வந்துள்ளனர். தனக்குத்தானே ஆணிகளை ஏற்றிக் கொள்கிறாள் என்பது அவர்களின் குற்றச்சாட்டு. அவளோ இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறாள். அவள் சகோதரனும் இதற்கு ஆதரவாகவே கருத்து சொல்லி வந்திருக்கிறான்.

2012 தொடக்கம் தனக்கு வேதனையளித்து வந்த இந்த ஊசிகள் எப்படி உள்நுழைந்தன என்று தெரியாது முழிக்கிறாள் பெண். உடம்பில் ஊசிகள் விளைவதில்லை. வெளியில் இருந்து வந்தவைதான் இவை என்கிறார்கள் மருத்துவர்கள்.

ஆனால் இன்று வரையில் மூலம் கண்டுபிடிக்கப்படவில்லை. இது ஒரு கற்பனைக் கதையுமல்ல. யாரோ இவளை மயக்க நிலையில் கிடத்தி விட்டு, கால்களுக்குள் ஊசியை ஏற்றினார்களோ? ஏன் முழந்தாளுக்கு கீழ் மட்டும், இந்த ஊசிகள்?

புரியாத புதிர்களில் இதுவும் ஒன்று.

**இலங்கை இராணுவம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துள்ள பாலியல் குற்றங்கள் குறித்து வாசிங்டன் போஸ்ற் பத்திரிகை அண்மையில் கட்டுரை ஒன்றை வெளியிட்டது. அதன் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**
**நன்றி – புதினப்பலகை.**



# மீண்டும் ஆயுதப் போர் வெடிக்கும்!

இராணுவத்தினரால் பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் சித்திரவதைகளுக்கு உட்பட்ட 50 தமிழர்கள் தொடர்பான நேர்காணல் அறிக்கை ஒன்றை அண்மையில் அசோசியேட்டட் பிரஸ் வெளியிட்டிருந்தது.

இவர்கள் படையினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை, பாலியல் ரீதியான தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டமை மற்றும் முட்கம்பிகளால் தாக்கப்பட்டமை உட்பட பல்வேறு மீறல்களால் உடல் மற்றும் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளமைக்கான மருத்துவ அறிக்கைகள் மற்றும் உளவியல் வல்லுநர்களின் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுண்சிலின் பூகோள கால மீளாய்வில் இலங்கை கலந்து கொண்ட வேளையில், அசோசி யேட்டட் பிரஸ் படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் மீறல் மற்றும் சித்திரவதைகளை உறுதிப்படுத்தி அறிக்கை வெளியிட்டமை இலங்கைக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது.

சித்திரவதைகள் தொடர்பாக தமது நாடானது 'பூச்சிய சகிப்புத் தன்மைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் கவுண்சிலிடம் இலங்கைப் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ள நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள அசோசியேட்டட் பிரஸ் அறிக்கையானது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

'இவ்வாறான வக்கிரம் மிக்க வன்முறைச் சம்பவங்களை தான் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. இது எனக்கு மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது' என மனித உரிமைகள் விசாரணையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தைப் பொறுத்தளவில் இது அசாதாரண சம்பவமல்ல. இவ்வாறான பல்வேறு சம்பவங்களை அவர்கள் ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர். 2016 இல், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட போது தாம் பாலியல் வன்புணர்வுக்கும், பாலியல் சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டதாகவும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் 'சித்திரவதையிலிருந்து விடுபடல்' (Freedom From Torture) அமைப்பால் 2016 இல் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலில் கலந்து கொண்டவர்களில் 71 சதவீதமான தமிழர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். தமிழர்கள் தமது கலாசாரம் காரணமாக இவ்வாறான சித்திரவதைகளை வெளியில் தெரிவிப்பதற்கு தயக்கம் காண்பிக்கின்றனர். பாதிக்கப்பட்ட அனைத்து தமிழ் மக்களும் தாம் சந்தித்த மீறல்களை வெளிப்படுத்தினர் இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என 'சித்திரவதையிலிருந்து விடுபடல்' அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போரானது முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு 8 ஆண்டுகள் கடந்து விட்டன. அத்துடன் இங்கு இடம்பெற்ற அதிகாரத்துவ ஆட்சி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவிற்கு வந்தது. இந்நிலையில் தற்போதும் இவ்வாறன சித்திரவதைகள் மற்றும் மீறல்கள் இலங்கையில் தொடர்வது மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டு விட்டதாக அனைத்துலக சமூகம் பாராட்டி வரும் இந்த வேளையில் அங்கு தொடரும் மீறல்களை உறுதிப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையானது அனைத்துலக சமூகத்திற்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தால் பாலியல் வன்புணர்வு மற்றும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவது அங்கு நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கு தடையாகவே உள்ளது.

போர் முடிவிற்கு வரும் போது இவ்வாறான வன்முறைகள் தொடரப்பட்டால் மீண்டும் இலங்கையில் ஆயுதக் குழுக்கள் தமது ஆயுதங்களைத் தூக்கும் நிலை ஏற்படலாம். இதனால் வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்வோர் தமது நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கு இடையூறு ஏற்படும். அத்துடன் இலங்கையில் குற்றச்செயல்கள் மேலும் அதிகரிக்கும்.

இலங்கை ரசாங்கமானது போர் இடம்பெற்ற வலயங்களில் புலிகள் அமைப்பு மீண்டும் உருவாவதைத் தடுப்பதற்காக மிகப் பலமான இராணுவ மயமாக்கலை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் வாழும் மாவட்டங்களில் இருவருக்கு ஒரு சிப்பாய் என்ற விகிதத்தில் இலங்கை இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான பலத்த இராணுவ மயமாக்கலுக்கு உட்பட்டுள்ள தமிழ் மக்கள் தொடர்ந்தும் படையினரால் கண்காணிக்கப்படுவதுடன் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகின்றனர். புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பலர் இன்றும் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். போர்க் காலத்திலும் இலங்கையில் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனால் ஒப்பீட்டள வில் இந்தச் சம்பவங்கள் குறைவாகவே இடம்பெற்றன. ஏனெனில் போரில் பங்குபற்றிய ஒரு தரப்பினரான படையினர் மட்டுமே இவ்வாறான பாலியல் வன்புணர்வு மீறல்களை மேற்கொண்டனர்.


மற்றைய தரப்பினரான தமிழீழ விடுதலைப் புலிகள் பாலியல் வன்புணர்வுகளில் ஈடுபடவில்லை. இவர்கள் இந்த மீறலுக்கு எதிராக மிகக் கடுமையான கோட்பாடு ஒன்றை உருவாக்கியிருந்தனர். படையினர் சோதனைச் சாவடிகளில் தமிழ் மக்களை சோதனை செய்யும் போது பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபட்டனர். இதேபோன்று போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த புலிகள் அமைப்பின் பெண் உறுப்பினர்களை மிகக் கொடுமையாக பாலியல் வன்புணர்வுகளில் ஈடுபடுத்திய காணொலிகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்த இடைத்தங்கல் முகாம்களிலும் இராணுவத்தினர் பாலியல் வன்புணர்வுகளை மேற்கொண்டனர். வெளிநாட்டில் அமைதி காக்கும் பணிக்காகச் சென்ற இலங்கைப் படையினர் அங்கும் பல்வேறு பாலியல் குற்றங்களில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஹெய்ட்டியில் ஐ.நா அமைதி காக்கும் பணியில் ஈடுபட்ட இலங்கை இராணுவப் படையினர் சிறுவர்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர்.

இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்படும் ஐந்து தமிழர்களில் ஒருவர் இராணுவத்தால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பல்வேறு மீறல் சம்பவங்களில் படையினர் ஈடுபடுகின்ற போதிலும் போர் முடிவுற்ற பின்னர் இடம்பெற்ற ஒரேயொரு பாலியல் வன்புணர்வுக் குற்றத்திற்காகவும் போர்க் காலத்தில் இடம்பெற்ற இரண்டு குற்றங்களுக்காகவும் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

ஹெய்ட்டியில் இடம்பெற்ற சிறுவர் பாலியல் மீறல் குற்றச்சாட்டுத் தொடர்பில் இதுவரை எந்தவொரு இலங்கைச் சிப்பாயும் தண்டிக்கப்படவில்லை. இலங்கை இராணுவத்தினர் இவ்வாறான மீறல் சம்பவங்களில் ஈடுபடுவதற்கு பொறுப்பாகவிருக்கும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் தண்டிக்கப்படும் போது மாத்திரமே இவ்வாறான திட்டமிட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியும். இலங்கையானது அனைத்துலக சமூகத்திற்கு தனது நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதாகவும் மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறுவதாகவும் வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. ஆனால் இன்னமும் இந்த வாக்குறுதிகள் செயற்படுத்தப்படவில்லை.

போர்க் காலத்தில் இடம்பெற்ற குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதாக இலங்கை வாக்குறுதி வழங்கிய போதிலும் தனது படையினர் ஒருபோதும் நீதியின் முன் நிறுத்தப்படமாட்டார்கள் என அந்த அரசாங்கம் தொடர்ந்தும் உறுதிப்பாட்டை அளித்து வருகிறது. வெளியிடப்படவுள்ள பூகோள கால மீளாய்வு அறிக்கையில் சிறிலங்காவில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் விவரமாகப் பதிவுசெய்யப்படும். அனைத்துலக சமூகமானது தொடர்ந்தும் இலங்கையை விசுவாசமிக்க நல்லதொரு நாடு போன்று நடத்துவதுடன் இதனுடன் முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகள் மற்றும் ஆழமான இராணுவ உடன்படிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.





இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என சர்வதேச சமூகம் கருதினாலும் கூட, இலங்கையில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவது கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

– தமிழில் நித்தியபாரதி –

# வயது வந்தோருக்கு மட்டும்..! - உ

- ஜெபராணி -



‘அறிவு வளர்ச்சி போதாது’, ‘அனுபவம் பத்தாது’, ‘சிந்திக்கும் திறன் கிடையாது’ எனக் குழந்தைகளை எம் கட்டுப்பாட்டில் வைக்க எத்தனை சாட்டுகள்! உண்மையில் குழந்தைகளுக்கு இப்படியான எந்தக் குறைபாடும் இல்லை. குழந்தைகள் என்பவர்கள் யார்? சின்னஞ்சிறிய மனிதர்கள். நமக்குப் பின்னால் பிறந்தவர்கள் என்பதைத் தாண்டி அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. பெரியவர்களைப் போலவே அறிவும், உணர்வும், சிந்திக்கும் ஆற்றலும் குழந்தைகளுக்கு உண்டு. இன்னும் கூடுதலாக எதிர்மறை விடயங்களைச் சேகரிக்காத ஆரோக்கியமான மனநிலையையும் அவர்கள் கொண்டிருக்கின்றனர். சரியை சரி என்றும், தவறைத் தவறென்றும் அவர்களுக்குப் பிரித்துப் பார்க்கத் தெரியும். பிரச்னை என்னவென்றால் அதை நம்ப நாம் தயாராக இல்லை என்பதுதான்.

இதனாலேயே ‘எல்லாம் உன் நன்மைக்கு’ என்ற பெயரில் நம்மில் பலரும் ஒருவகையான வன்முறையை, வலுக்கட்டாயத்தைக் குழந்தைகள்மீது செலுத்திக் கொண்டே இருக்கிறோம். பெற்றோருக்குப் பிடித்த வகையில் உடையணிந்து, அவர்களுக்குப் பிடித்த பாடத்தைப் படித்து, அவர்களுக்குப் பிடித்த மாதிரியான வேலைக்குப் போய், அவர்கள் பார்க்கும் பெண்ணையோ, பையனையோ கல்யாணம் கட்டிக்கொண்டு, அவர்கள் விரும்புகிற அந்தஸ்திலேயே வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அப்படியில்லாத பிள்ளைகளைப் பெற்றோர்களே அடங்காப்பிடாரி, வீட்டுக்கு ஆகாதது, தண்டச்சோறு, ஓடுகாலி, பிழைக்கத் தெரியாதவன் என்றுதான் அழைக்கிறார்கள்.

மருத்துவராக இருக்கும் பெற்றோர் பிள்ளையும் மருத்துவமே படிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். பொலிஸ், பொறியிலாளர்கள், நடிகர் என யாரும் விதிவிலக்கல்ல. தான் பார்க்கும் வேலையை அப்படியே குலத்தொழிலாக மாற்றிவிட இன்றைய நம் நவீன படித்த பெற்றோரும் முனைகின்றனர். குழந்தைக்கு எதில் ஆர்வம் என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை. எத்தனையோ இசைக் கலைஞர்களை, விஞ்ஞானிகளை, தொழில் முனைவோரை, விவசாயிகளை, ஓவியர்களை, விளையாட்டு வீரர்களைக் கொன்றுதான் இங்கே இத்தனை பொறியியல் பட்டதாரிகள் உருவாகினர். இவர்களில் எத்தனை பேருக்கு அது சொந்தத் தெரிவாக இருந்திருக்கும் என்பது நாமறிந்ததே! பட்டதாரிகள் பலர் ஹோட்டலில் பரிமாறுபவராக, கார் ஓட்டுநராக, புடைவைக் கடையில் விற்பனையாளராக வேலை செய்கின்றனர். இந்த வேலைகளைச் செய்வதில் எந்தத் தாழ்வும் இல்லை. ஆனால், இதற்கு ஏன் அவர்கள் ஐந்தாண்டுகள் சர்வாதிகாரக் கட்டுப்பாடுகள் நிறைந்த பல்கலைக்கழகத்தில் உழன்றிருக்க வேண்டும்?!

அண்மையில் போரூரிலிருந்து ராயப்பேட்டைக்குப் போக தனியார் காரை முற்பதிவு செய்தேன். ஓட்டுநராக வந்தவர் ஒரு பொறியியல் பட்டதாரி என, பேச்சுக் கொடுத்த போது தெரிந்தது. ‘பொறியியல் படிச்சுட்டு ஏன் கார் ஓட்டுறீங்க, வேலை கிடைக்கலையா?” என்று கேட்டேன்.”

‘அட நீங்க வேற, நான் இப்போதான் சுதந்திரமா இருக்கேன். நம்மளால கொம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துகிட்டு மெஷின் மாதிரி வேலை செய்ய முடியாது. ஆறு மாசம் போனேன். அப்பா சாமி விடுங்கடானு ஓடி வந்துட்டேன். கொஞ்ச நாள் சும்மா சுத்திட்டிருந்தேன். தண்டமா இருக்கேன்னு வீட்ல ஒரே பேச்சு. நல்லா யோசிச்சு, ஒரு காரை வாங்கி ஓட்டுறதுனு முடிவு பண்ணினேன். வீட்டைப் பொறுத்தவரை இது கௌரவக் குறைச்சல்தான். ஆனால் எனக்கு இது சுதந்திரம். இந்த பயணம் போதும்னா முடிச்சுட்டு வீட்டுக்குப் போயிருவேன். லைஃப் நம்ம கொண்ட்ரோல்ல இருக்கு” என்றார். கேட்க சந்தோசமாக இருந்தது.

எல்லாப் பெற்றோருமே தன் பிள்ளைகள் தன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக சம்பாதிக்க வேண்டுமென ஆசைப்படுகின்றனர். தன்னைவிடப் பெரிய பதவியை வகிப்பதுதான் கௌரவம் என நினைக்கின்றனர். அதற்கான நிர்ப்பந்தங்களைச் சிறுவயதிலிருந்தே விதைக்கத் தொடங்கிவிடுகின்றனர். கவனம் திசை திரும்பிவிடாதபடி கடிவாளங்கள் கட்டப்படுகின்றன. பெருஞ்சுமைகள் ஏற்றப்பட்ட வண்டியில் பூட்டப்படும் இந்தக் கன்றுக்குட்டிகள் மூச்சுமுட்டி, எச்சில் ஒழுகி, ஆற்றல் அனைத்தும் வடிந்து போகிற வரைத் துரத்தி ஓட்டப்படுகின்றன. பள்ளிக் கல்வியை முடிக்கும் போது பாதி வாழ்க்கையும், பல்கலைக்கழகப் படிப்பை முடிக்கையில் மீதி வாழ்க்கையும் முடிந்துவிடுகிறது. பள்ளியிலோ, குடும்பங்களிலோ வெளியுலகம் பற்றி எதுவுமே கற்பிக்கப்படாமல் வெறும் ஏட்டுக்கல்வியை மட்டும் மூளையில் நிறைத்துக்கொண்டு சமூகம் எனும் சுழலுக்குள் தள்ளப்படுகின்றனர். சதா புரட்டிப் புரட்டிப் போடும் இந்தச் சுழலில் சிக்கி மடிந்துவிடாமல் மீழ்வதுதான் ஆவதுதான் வாழ்க்கை என்றாகிவிடுகிறது இவர்களுக்கு.

உண்மையில் வாழ்க்கை என்பது என்ன? தப்பிப் பிழைத்துக்கொண்டே இருப்பதா? துரத்தத் துரத்த ஓடிக்கொண்டே இருப்பதா? நாம் அப்படித்தான் நம் குழந்தைகளுக்குக் கற்பிக்கிறோம். இல்லை அச்சுறுத்துகிறோம். வாழ்க்கை என்பது வாழ்தல்தானே! நம்மில் எத்தனை பேருக்கு வாழ்தல் என்ற சொல்லின் அர்த்தம் தெரியும்? அன்பு செலுத்தி, நோயின்றி, இளைப்பாறி, இன்புற்றிருத்தலே வாழ்தல்! பணம் உட்பட மற்றதெல்லாம் அப்புறம்தான். நாம் நம் குழந்தைகளுக்கு வாழக் கற்பிக்கவில்லை. மாறாக, தப்பிப் பிழைத்திருக்கச் சொல்லித் தருகிறோம்.

உயிர்களின் மகிழ்வில்தான் பூமியின் உயிர்ப்பு இருக்கிறது. உயிர்கள் அல்லலுற்று அழிவுறும் போது பூமியும் அழியத் தொடங்குகிறது. ஆனால், நாம் இதைப் புரிந்து கொள்வதில்லை. மனிதர்கள் சமூக விலங்கு எனில் குழந்தைகள் அதன் குட்டிகள். அவர்களை சமூகத்திற்குத் தகுதியானவர்களாக வளர்க்கும் பொறுப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் இருக்கிறது. ஆனால், இதைப் புரிந்துகொள்ளாமல் குழந்தை பெற்றுக் கொள்ளுதலை தனிப்பட்ட குடும்ப விருத்திக்கான விஷயமாக நாம் பார்க்கிறோம். ‘என் குழந்தை வளர்ந்து, கல்வி கற்று, பெரும்பண மீட்டி, நல்ல அந்தஸ்துடன் வாழ்ந்து, என் வம்சத்தை விருத்தி செய்ய வேண்டும். அவ்வளவுதான்.’ உண்மையில், இயற்கையின் கண்ணி அறுபடாமல் பாதுகாக்கும் ஒரு சமூகச் செயல்பாடுதான் குழந்தை பெறுதல். நாம் நமக்காகக் குழந்தை பெற்றுக்கொள்வதாக நினைக்கிறோம். ஆனால், குழந்தைகள் இந்த பூமியின் இயக்கத்திற்காகப் பிறக்கிறார்கள். அதைத்தான் கலீல் ஜிப்ரான் சொல்கிறார்.

நம்மால் படைக்கப்படுவதாலேயே நம் பிள்ளைகளை நமக்கு வாய்த்த அடிமைகளென நினைக்கிறோம். குழந்தைகள் முன் இருக்கும் கடமை மிகப்பெரியது. அவர்கள் எதிர்கால சமூகத்தைக் கட்டமைக்கப் பிறக்கிறார்கள். அவர்களுக்கு முன்னர் பிறந்தவர்கள் என்ற முறையில் எமக்கு நிறைய பொறுப்புணர்வு இருக்கிறது. குழந்தை வளர்ப்புக்கென நவீன உத்திகளை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம்முடைய தொன்மைச் சமூகங்கள், குழந்தைகளின் முக்கியத்துவத்தை, இப்பூமியில் குழந்தைகளுக்கான இடத்தை அறிந்து மதித்தவர்களாக இருந்தன. ஹநாம் இந்த பூமியை நம் முன்னோர்களிடமிருந்து உரிமையாகப் பெறவில்லை. நம் குழந்தைகளிடமிருந்து இரவல் பெற்றிருக்கிறோம்’ என்கிறது செவ்விந்தியச் சொல்வழக்கு. அதை நாம் இப்படியும் சொல்லலாம். இந்த பூமி குழந்தைகளை நமக்கு இரவல் தந்திருக்கிறது. இரண்டின் மதிப்பும் தெரியாததால் இரண்டையும் நம் போக்கில் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறோம்.

பெரியோரே, பெற்றோரே நமக்குக் குழந்தைகள்மீது பொறுப்புதான் இருக்கிறது, அதிகாரமில்லை. பொறுப்போடு நாம் செய்யப் பல கடமைகளும் காத்திருக்கின்றன.

முதலில் குழந்தைகள் முன் நீங்கள் கிழித்து வைத்திருக்கும் அந்த நேர்க்கோட்டை அழியுங்கள். நாம் அங்கிருந்து தொடங்குவோம்.

(இன்னும் பேசுவோம்...)

## செருப்புக்கு அளவாகக்... (06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார சபை மின்இணைப்புக் கொடுத்துள்ளது. இவ்வாறாக மாவீரர் குடும்பங்களுக்கு அநியாயம் நிகழ்கையில் மௌனமாக இருக்கும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், உயிரியல் பூங்கா-விலங்கியல் பூங்கா என்றெல்லாம் வகுப்பு எடுக்கிறார். மாவீரர் குடும்பங்கள் மட்டுமல்ல முன்னாள் போராளிகள் கொள்வனவு செய்த காணிகள் அதனை விற்றோரால் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம்"யாரொடு நோவோம். யார்க்கெடுத்து உரைப்போம்- உள்ளக ஆக்கிரமிப்பைத் தடுக்க யார் உண்டு?" என்ற தலைப்பில் தயாளன் என்பவர் இணயத்தில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.
வடக்கில் மட்டுமல்ல கிழ்ககிலும் இதே நிலைதான், குடும்பஸ்தராக இருக்கும்போதே, 1983.இல் இயக்கத்தில் இணைந்து கொண்டவர் இளங்கோ (இஸ்தூஸ்பிள்ளை மேரிதாசன்). இவர் பயிற்சி முகாமில் இருக்கும்போதே இரண்டாவது குழந்தைக்கு தந்தையானார் என்ற செய்தி கிடைத்தது. கர்ப்பமான மனைவியையும், அரச உத்தியோகத்தையும் விட்டே பயிற்சிக்கு சென்றவர் இவர். மூன்றாவது குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் மிக முக்கியமான கடமை ஒன்றுக்காக, மட்டக்களப்பிலிருந்து திருமலைக்கு செல்ல வேண்டியிருந்தது. பெண்குழந்தை பிறந்தது. அதன் முகத்தைக்கூட இவர் பார்க்கவில்லை.. வெருகலில் படையினர் மறைந்திருந்து இவர் மீது தாக்குதல் நடத்தினர். இறுதிவரை போராடிய இவர் ரவைகள் தீர்ந்த நிலையில் சயனைட்டை உட்கொண்டு வீரச்சாவு அடைந்தார். இந்த உன்னதமான போராளி குறித்து கிட்டு. "களம்" என்ற பத்திரிகையில் எழுதியுள்ளார். இந்தப் போராளி மட்டுநாவற்கேணியில் ஒரு காணி வாங்கியிருந்தார். தனது மனைவி அஞ்சலா கிறிஸ்தோபர் மேரிதாசன் என்ற பெயரிலேயே இதனை வாங்கியிருந்தார். 1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் நாள் வாங்கிய இந்தக் காணியின் உறுதியை அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல் சாமிநாதன் என்னும் நொத்தாரிஸ் எழுதியுள்ளார். பொன்னையா நடராசா, குமாரசாமி வைரமுத்து ஆகியோர் சாட்சிகளாகக் கையொப்பமிட்டுள்ளனர். இந்த விடயங்களை எல்லாம் நன்கு தெரிந்த பத்தரிகையாளர் ஒருவர் "நமது ஈழநாடு" பத்திரிகைக்காக சுனாமி அழிவுகளைப் பார்வையிட்டு கட்டுரை எழுத மட்டக்களப்புக்கு சென்றிருந்தார். அந்தக் காணி பக்கத்து வீட்டுக்காரரான சின்னவன் என்று அழைக்கப்படும் தியாகராஜா என்பவரின் காணியுடன் இணைக்கப்பட்டிருந்தது. வேலிகள் வெட்டப்பட்டு இருந்தன." ஏன் வேலி வெட்டப்பட்டுள்ளது"? எனக் கேட்டார் அவர். "சுனாமி வீட்டுத் திட்டத்துக்கு காணி எடுக்கிறார்கள். அதுதான் அதைவெட்டி எனது காணியுடன் இணைத்துள்ளோ.. இளங்கோவன் காணியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இதனைச் செய்துள்ளளேன் "எனப் பதிலளித்தார் சின்னவன்.
இறுதிப் போரில் எல்லோரும் செத்துத் தொலைத்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஏதோ ஒரு மோசடி செய்து காணியை விற்றுவிட்டார் சின்னவன். அந்தப் பத்திரிகையாளர் அப்போது கிழக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கத்தை சந்தித்து நிலைமையை எடுத்துரைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் கொடி, முதன் முதல் கிரானில்தான் ஏற்றப்பட்டது. அந் நிகழ்வில் கலந்து கொண்டவர் துரைராஜசிங்கம், எங்கே போனாலும் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதை வரிகளுடன் உரையை ஆரம்பிப்பவர் என்ற வகையில் இவரிடம் போனால் நீதி கிடைக்கும். மாவீரர் குடும்பத்தினருக்கு அநீதி நடந்தால் தட்டிக் கேட்பார். இவர் ஒரு சட்டத்தரணி. ஆகையால் நீதிமன்றம் மூலமேனும் நடவடிக்கை எடுத்து நீதியைக் காப்பார் என்ற நம்பிக்கையி லேயே போனார். விபரத்தைக் கேட்ட அவர் மோசடி செய்தவரின் பெயரைக் கேட்டார். தியாகராஜா என்றதும், சினனவனா எனக் கேட்டார். இவருக்கு சின்னவனைத் தெரிந்திருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டார் அப் பத்திரிகையாளர்..
தொடர்ந்து வேறு சிலரிடம் சின்னவனுக்கும் அமைச்சருக்குமான தொடர்புகளை விசாரித்தபோது கடந்த மாகாணத் தேர்தலில் அமைசருக்காக பரப்புரைப் பணி (வாக்குச் சேகரிப்பு) போன்றவற்றில் ஈடுபட்டவர் சின்னவன் என்ற உண்மை தெரிந்தது. "கொடுமை கொடுகை என்று கோயிலுக்குப் போனால் அங்கே ஒரு கொடுகை தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்த தாம்" எனக் கூறுவார்கள்..
பத்திரிகையாளர் எதிர்பார்த்தது போல அமைச்சருக்கு மாவீரர் குடும்பத்தினரின் நலனை விட, தனக்காகப் பரப்புரை செய்த சின்னவனின் நலந்தான் பெரிதாகத் தெரிந்திருக்கின்றது போல இருக்கின்றது. மழுப்பலான, தட்டிக்கழிக்கும் பாணியிலான பதில்களே அவர் தரப்பிலிருந்து கிடைத்தது. அமைச்சரைப் பொறுத்தவரை, அடுத்த தேர்தலிலும் தனக்காகப் பரப்புரை செய்ய ஆள் வேண்டும். " நான் செத்தா என்ர மனுஷி பிள்ளைகளை இயக்கம் கவனிக்குந்தானே ?" என இளங்கோ அடிக்கடி கேட்பது அந்தப் பத்திரிகையாளருக்கும் சின்னவனுக் கும் தெரியும். இந்தப் பட்டியலில் அவரது காணி இல்லாதபடியால் அதனை, தானே கவனித்து , விற்று பணத்தை எடுத்துவிட்டார் சின்னவன்..மேலும் பல விடயங்கள் உள்ளன. கட்டுரையின் நீளம் கருதி இத்துடன் முடிக்கிறேன். மாவீரருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அவர்களது குடும்பங்களுக்கு எதிராக நடக்கும் துரோகங்களுக்குத் துணைபோகாதீகள். நாடாளுமன்று, மாகாண சபைகளில் மாவீரர், முன்னாள் போராளிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக முணுமுணுக்கவாவது செய்யுங்கள் .அதைவிட்டு பூங்கா அமைக்கிறேன், புல்லுப் பிடுங்கக்கூட வராதவர்கள் எமக்கெதிரே வராதீர்கள் என சண்டித்தனம் பண்ணாதீர்கள். அல்லது உங்கள் உதவியாளர்களைக் கொண்டு சொல்ல வைக்காதீர்கள.

## குறையும் விலை... (13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டரீதியான மதுசாரம் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையங்களை அதிகரிப்பதால் கசிப்பு போன்ற மதுசார வகைகளின் பாவனையில் வீழ்ச்சி ஏற்படும் என எந்தவித ஆய்வுகளும் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

நாட்டில் சட்டவிரோதமான செயல்களை கட்டுப்படுத்துவதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். அதைவிடுத்து சட்டரீதியான பொருட்களின் விலையைக் குறைப்பதால் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படப்போவதில்லை.

**கருத்து 04**

மதுசார நிறுவனங்களுக்கு நிலவும் வரி மற்றும் கட்டுபபாடுகளினால் சுற்றலாத்துறை சரிந்து விழப்போகின்றது.

உண்மை நிலைமை: மதுசாரம் தொடர்பில் காணப்படம் சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை மாற்றியமைப்பதால் பொத மக்களுக்கோ, நாட்டுக்கோ, சுற்றுலாப்பயணிகளுக்கோ எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. எமது நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் மதுசாரம் அருந்திவிட்டு செல்வதற்காக வருவதில்லை. என்பத அனைவரும் அறிந்த தொன்றாகம். சுற்றுலாப் பயணிகளுக்காக மட்டும் மதுசார வகைகள் விலைகொடுத்து வாங்கக்கூடிய விசேட சலுகை முறைகள் பல்வெறு நாடுகளிலும் அமுல்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இக்கருத்துக்கள் சட்டங்களை தமக்கு சாதகமாக மாற்றிக்கொள்வதற்காக மதுசார உற்பத்தி நிறுவனங்களால் வெறுமனே முன்வைக்கப்படும் வதந்திகளாகும்.

மதுசாரம் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் குறைவு என நிறுவனங்கள் முன்வைத்தாலும் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து நகரங்களிலும் மதுசார விற்பனை நிலையங்கள் 9பார்கள்) காணப்படுகின்றன. இதனை எந்தவொரு பகுப்பாய்விலும் இலகுவாக அறிந்துகொள்ளலாம். மதுசார உற்பத்தி நிறுவனங்கள் இலாபத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் நாட்டின் சட்டங்களை மாற்றுவதற்காக பல்வேறு பொய்யான, விஞ்ஞான ரீதியற்ற சில தகவல்களை ஊடகங்களின் வாயிலாக பரப்பி வருகின்றனர். குறிப்பாக இம்முறை வரவு- செலவுத் திட்டத்தின்போது நிதியமைச்சின் ஊடாக நிறுவனங்கள் தமது இலக்கை அடைய எண்ணுவது தெளிவாக விளங்குகின்றது. இந்நிலைமையை மாற்றுவதற்காகவும், இளைஞர்கள், பெண்கள் ஆகியோரை அவர்களின் இலக்குக்குழுவுக்குள் நுழைய விடாமல் தடுப்பதற்காகவும், குடிப்பவர்கள், குடிக்காதவர்கள் என அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் இதுவாகும்.

இன்றே உங்களது கடமையைச் செய்யுங்கள்.

## பெண்ணால் வீழ்ந்த... (22ஆம் பக்கத் தொடர்ச்சி)

1980இல் சிம்பாப்வேயில் பிரிட்டன் காலனித்துவ ஆட்சி முடிந்தது தொடக்கம் நாட்டின் ஏக தலைவராக இருக்கும் ரொபர்ட் முகாபேவை ஒரு கோமாளி சர்வாதிகாரியாக மேற்குலகம் சித்திரித்தபோதும் சிம்பாப்வேயை பொறுத் தவரை அவர் ஒரு தேசத்தின் பிதா, ஆபிரிக்காவின் விடுதலை வீரர்களில் அவரும் ஒருவர். ஆட்சியில் தொங்கிக் கொண்டிருந்தது, ஆட்சி செய்யத் தெரியாமல் நாட்டையே திவாலாக்கியது என்று எத்தனை விமர்சனங்கள் இருந் தபோதும் இந்த தள்ளாடும் வயதிலும் யாராலும் அசைக்க முடியாதவராகவே இருந்தார்.

அமெரிக்கா, பிரிட்டன் என்று மேற்குலம் கூட இந்த முதியவரை எப்படி துரத்துவதற்கு என்று வழிதெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தபோது அதிகார ஆசை பிடித்த ஒரு பெண் அவரை ஆட்சி கவிழ்க்க போதுமானதாக இருந்திருக்கிறார். பதவியை துறந்த முகாபே இப்போது தனது ஆடம்பர மாளிகையில் வீட்டுக் காவலில் இருக்கிறார். தன்னை இந்த நிலைமைக்கு கொண்டுவந்த கிரேஸ் முகாபே எங்கே இருக்கிறார் என்று தெரி யவில்லை.

ஒருவேளை நாட்டை விட்டு தப்பித்து சென்றிருக்கலாம். இல்லை தனது எதிரிகளிடம் மாட்டிக் கொண்டிருக்கலாம். பிற்போக்கான இதிகாச கதைகளில் தான் பெண்ணால் கெட்ட மன்னாதி மன்னர்களை பார்த்திருக்கிறோம். கடவுளால் மாத்திரமே என்னை பதவியில் இருந்து தூக்க முடியும் என்று சொன்ன முகாபே... பாவம் அருகில் இருக்கும் மனைவியை பார்க்க மறந்துவிட்டார்.

# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 25

— உமா சந்தோஷ்



மனதார ட்ரைவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் நடா மனைவி. டொக்டருக்கு முன்பாகத் தன்னைப் பேசியதை விடத் தனது திருகுதாளம் டொக்டருக்கு தெரிய வந்ததைத்தான் அவமானமாகக் கருதினார் நடா. அவரது மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க நடாவுக்குப் பல புத்திமதிகளைச் சொன்னார் டொக்டர். 'டையபற்றிக்" இருக்கும்போது இப்படி இனிப்பைச் சாப்பிட்டால் அதனால் வரும் அசாதாரண நிகழ்வுகளைப் பலவாறு விளங்கப்படுத்திவிட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டார் டொக்டர். அவருக்கு தேநீர் கொடுக்கக்கூட மனோநிலை இடம் கொடுக்காததை எண்ணி வருந்தினாள் நடா மனைவி.

தீபாவளி, கிறிஸ்மஸ் தினத்தன்று இரவு கேட்கும் வெடிச்சத்தம் எத்தனை இரைச்சலை உண்டு பண்ணுமோ, அப்படியான ஒரு இரைச்சல் நடா வீட்டிலும் கேட்டுக் கொண்டிருந்தது. நடா மனைவி வீட்டின் மேலும் கீழுமாக நடந்து கொண்டு நடாவைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். வீடே வெடித்து அதிர்ந்து கொண்டிருந்தது.

நடா இனிப்பு அதிகளவு சாப்பிட்டு வருத்தத்தைத் தேடிக் கொள்வாரெண்டோ அல்லது இறந்துவிடுவார் என்றோ நடா மனைவி கவலைப்படவில்லை. டையபற்றிக் வந்து நடாவின் கை கால் இழுத்துப் படுக்கையாகப் படுத்துவிட்டால் என்ன செய்வது என்பதுதான் அவளது கவலையாக இருந்தது. யார் பார்ப்பது? எப்படிப் பார்ப்பது? தன்னில் பொறுத்துப் போவாரோ? என்பதை எண்ணும்போது அவள் தலை சுற்றியது. அப்பிடி ஏதேனும் நடந்துவிட்டால் எல்டர்ஸ் ஹோமில் நடாவைச் சேர்த்துவிடலாம் என்றும் எண்ணினாள். பின்னர் அதுவும் பிழைபோலத் தோன்றியது.

இவ்வளவு உழைத்து தங்களை எல்லாம் உச்சத்தில் வைத்த மனிதனை எப்படிக் கவனிக்காமல் விடுவது? ஊரார் சிரிப்பாரெண்டும் நடா மனைவி சிந்திக்கலானாள். எதற்கும் ஓடிட்டர் மனைவி வரட்டும் பின்பு தீர்மானிக்கலாம் என்று முடிவு பண்ணிக் கொண்டு சமையலறையில் அமளியாகக் கடமையில் இருந்தாள் நடா மனைவி. அந்தக் கணம் தொட்டு நடா கடூழியச் சிறைத் தண்டனை பெற்ற ஒரு கைதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். வீட்டுக்குள் நடாவைக் கண்காணிக்க சி.சி.ரீ.வி. கமராக்களைப் பூட்டினால் என்ன என்றும் நடா மனைவி சிந்திக்கத் தொடங்கியிருந்தாள். நடாவுக்கு ஒன்று நடந்தால் பிள்ளைகளும், உறவுகளும் தன்னைக் குற்றம் சொல்ல முடியாமல் தன்னைப் பாதுகாக்க ஒரே வழி சி.சி.ரி.வி கமராக்கள்தான் என்பது நடா மனைவியின் முடிவு. இத்துடன் கமராக்கள் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தில் நடா குழப்படி செய்யாமல் இருப்பார் என்பதும் நடா மனைவியின் முடிவு.

அடுத்த நாள் கம்பனி ஒன்று வரவழைத்து வீட்டுக்குள் கமரா பூட்டக் கூடியதாக ஏற்பாடுகள் நடந்தன. நடா நடமாடும் அத்தனை பிரதேசங்களும் கமரா பொருத்தப்பட்டு அதை எங்கிருந்து பார்த்தாலும் தெரியக் கூடியதாகவும், விசேடமாக நடா மனைவியின் ஸ்மாட் போனில் பார்க்கக் கூடியதாகவும் பொருத்தும்படி ஓடர் கொடுக்கப்பட்டது. அத்துடன் நடாவைக் கண்காணிக்க முழு நேர ஊழியர் ஒருவரை வேலைக்கு வைக்க வேண்டும் எனவும் முடிவு செய்தனர். இந்த யோசனையை ஓடிட்டர் மனைவியே சொன்னாள்.

கமெரா பூட்டி ஒரு மாத காலமாகப் போகிறது. நடா வாடி வதங்கிப் போய் காணப்பட்டார். சரியாகக் குரல் கட்டியிருந்து, பேச வராததால் சற்றுத் திணறினார். நடாவுக்கு அந்த வீட்டில் சந்தோஷம் எட்டாக் கனியாக இருந்தது. பேச்சு மூச்சில்லாமல் இருந்தார் நடா. ருசியற்ற உப்புச் சப்பில்லாத உணவுகளை, தவிடு போன்ற உணவுகளைச் சாப்பிடுவது ரீவி பார்ப்பது என்று மிகவும் சிரமமான நாட்களாகக் கழிந்தது.

நடாவின் திருகுதாளத்தால் அதிகம் சிரமப்பட்டுக் கொண்டாள் நடா மனைவி. கடந்த ஒரு மாதகாலமாக லேடிஸ் கிளப் வேலைகளுக்கு அவள் செல்லவில்லை. நண்பர்கள், உறவினர்கள் என்று வீடுகளுக்கு அவள் 'விசிற்' செய்வதை நிறுத்திக் கொண்டாள். திருமணவீடுகள், செத்தவீடுகள் என்று எல்லாத்தையும் தவிர்த்துக் கொண்டாள். போகாததிற்குரிய காரணமாகப் பல பொய்களைச் சொல்லிக் கொண்டிருந்தள் நடா மனைவி. எந்தவித பொழுதுபோக்கும் இல்லாதவளாய் அவளுக்குப் பைத்தியம் பிடிப்பதுபோல இருந்தது. 'இந்த மனுசனாலை நிம்மதியா இருக்கேலாமைக் கிடக்கு. குழந்தைப் பிள்ளையைப் பாக்கிற மாதிரிப் பாக்க வேண்டி இருக்கு. கேவலமான மனுசன்' எண்டு தனக்குள் திட்டிக் கொண்டாள். அதற்காகவேனும் நடா நோயிலிருந்து விடுபட வேணும் என்று ஆண்டவனை வேண்டிக் கொண்டாள்.

அவளது லேடிஸ் கிளப்பில் இருக்கும் மற்றவர்களுக்கு இது போல பிரச்சினை இல்லை. பல பேரின் வீட்டில் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் கலியாணம் செய்திருந்தாலும் பெற்றோருடனேயே இருந்ததனால் அவர்கள் தந்தை, தாயைப் பார்த்துக் கொண்டார்கள். சிலருக்குப் புருஷன்மார்களால் தொல்லை இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே விண்ணுலகம் சென்றதனால் நடா போன்ற வருத்தமான வாழ்க்கையில் இருந்து தப்பித்துக் கொண்டனர். அவர்களைப் பார்க்க நடா மனைவிக்குப் பொறாமையாயிருக்கும். அதேவேளை நடாவைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு எரிச்சலாகவும் இருக்கும்.

ஆனால் இன்று அவள் கொஞ்சம் தெம்பாக இருந்தாள். அதற்கு அவளது சகோதரியான டொக்டர் மச்சாளிடமிருந்து போன் கோல் வந்திருந்ததே காரணம். அவள் இரண்டு நாட்களுக்குள் வருவதாகவும், வந்து இரு வாரங்களுக்கு கொழும்பில் தங்கப் போவதாகவும் சொல்லியிருந்தாள். தனது மனைவி ரெலிபோன் கதைப்பதை ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்த நடாவுக்குப் புளுகம் அதிகமாகியது. இந்த நரக வாழ்க்கையில் இருந்து தப்புவதற்குத் தருணம் வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டார்.

அன்று அதிகாலை நான்கு மணிக்கே நடா விழித்திருந்தார். டொக்டர் மச்சாள் அந்த நேரம் வந்திருக்க வேண்டும். வரவில்லை. அறையிலிருந்த மணிக்கூட்டை அடிக்கடி பாத்துக் கொண்டார். ஐந்து மணி இருக்கும் பெல் அடித்தது. நடா துள்ளிப் பாய்ந்து ஓடிப்போய்க் கதவைத் திறந்து கொண்டார். டொக்டர் மச்சாள் உள்ளே வந்ததும் வராததுமாக அவளைப் பிடித்து 'ஓ' வென்று கதறி அழுதார் நடா. அந்தச் சத்தத்தைக் கேட்டு என்ன? ஏதோ என்று பயந்து அங்கு ஓடிவந்தார் நடா மனைவி. சகோதரியைக் கண்ட சந்தோஷம் ஒரு புறமிருக்க, மறுபுறம் நடாவைப் பார்க்க எரிச்சலாகவும் இருந்தது. இருவருமாக டொக்டர் மச்சாளை உள்ளே கூட்டிக் கொண்டு வந்தனர்.

வந்த களைப்புத் தீர சற்று கண்ணுறங்கி எழுந்தவுடன், ஹோலில் இருந்து சகோதரியுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். தான் காலை உணவுக்குப் பின் வெளியே போவதாகவும், நடாவை கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படியும் சொல்லிக் கொண்டிருந்தாள் நடா மனைவி. அறைக்குள் அரைக் கண் தூக்கத்திலிருந்த நடாவுக்கு இதைக் கேட்டுச் சந்தோஷமாக இருந்தது.

தனது மனைவி வெளியே போனதும் தனது அறைக்குள் டொக்டர் மச்சாளைக் கூட்டிக் கொண்டு போனார். தனக்கு நடைபெற்ற அநீதிகள் அத்தனையையும் ஒன்று விடாமல் சொன்னார் நடா. கவனமாக அவர் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு நடா உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. இன்னும் இங்கேயே நடா இருந்தால் நிச்சயம் மரணித்துப்போவார் என்பதைப் புரிந்து கொண்டாள். இருந்தும் இந்த நிலையில் நடாவைத் தன்னுடன் அனுப்பச் சகோதரி முன்வருவாரா என்பதை இட்டு சந்தேகப்பட்டாள் அவள்.

(தொடரும்)

## மாவீரர் நாள்

தமிழ் மண்ணைக் காக்க
தம் உயிரை மண்ணில்
புதைத்திட்ட தமிழ் வீரர்களே!
உம் புகழ் சொல்ல
வார்த்தை இல்லை எம்மிடம்.

கார்த்திகை 27 இல் மட்டுமல்ல
நாள்தோறும் எம் மனதில்
கொடியாய் பறக்கும்
எம் மாவீர மணிகளே!
இளம் சுடரே!
தமிழ் இரத்தங்களே!
தெய்வத் திருமகனே!
மீண்டும் உம் பிறப்பிற்காய்
ஏங்குது எம் நெஞ்சம்.

தமிழ் சின்னத்தை நிலைநாட்ட
தம் இன்னுயிரை
சந்தனப்பேழையில் இட்ட
கரும்புலிகளே!
கரிகாலன் வழிநின்று
தமிழ் மண்ணை மீட்க
பாடுபட்ட தீபங்களே!
உம் புகழ்பாட
ராகம் இல்லை எம்மிடம்.

காடுமேடு பார்க்காமல்
நமக்காக பாடுபட்ட
மாவீர மணிகளே!
எம் உயிர் உள்ளவரை
மறவோம் உம் ஈகம்.

ஆசைகள் பலவற்றை துறந்து
ஆடம்பரம் பல இழந்து
எம் மண் காக்க
இறுதிவரை போராடிய
கார்மேகங்களே
உறுதிகுலையா உம் போராட்டம்
எம் உன்னத வரலாறு.

எம் தேச விடுதலைக்காய்
வித்தாகி விழுந்த
எம் மாவீர மணிகளே!
கல்லறை விட்டு வாருங்கள்.

புவிஅமுதன்
நெல்லியடி.

## விடியல்..

நீல வானில் உலா வந்த நிலவு
அழைத்துப் பேசியது பூங்காற்றை.
விசுக்கென்று கிளம்பியது காற்று
பசும் மரக்கிளைகளில்
ரகசியப் பேச்சு.
சருகுகள் பறந்தன
ஆற்றுநீர் விழித்துக்கொண்டாட்டம்
மலையருவி வீழ்ந்த இடமெல்லாம்
முத்துப் பரல்களாய்
நிலாத்துண்டுகள்
பூக்கள் எல்லாம் சோம்பல்
முறித்தன.
விடியப் போகும் செய்தியை
இப்படிச் சொல்லி அனுப்பியது
குறும்பு நிலா.
சூரியனின்
வருகையை·· 'தாமரைக்கு'



# நீந்திக் கடந்த நெருப்பாறு 05

நா. யோகேந்திரநாதன்

தாக்குதல்கள் மும்முரமாக இடம்பெற்ற அதேவேளையில் விநியோகப் போராளிகள் பாயும் ரவைகளுக்கு மத்தியிலும், வந்து விழும் குண்டுகளுக்கிடையேயும் சண்டையிடும் போராளிகளுக்கு ரவைகளையும் குண்டுகளையும் வழங்கிக் கொண்டிருந்தனர். அத்துடன் காயமடையும் போராளிகளையும் வீரச்சாவடைந்த போராளிக-ளின் உடல்களையும் அவர்களே உடனுக்குடன் களத்தை விட்டு வெளியே கொண்டுவந்து சேர்த்தனர். சண்டையிடுவதை விட அதுவே பெரும் ஆபத்தான பணியாக இருந்த போதும் அவர்கள் சளைக்காமல் ஓடியோடி தங்கள் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். மருத்துவப் போராளிகள் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக முதலுதவியை மேற்கொண்டுவிட்டு, உதவிக்கு வந்த இளைஞர்கள் மூலம் பண்டிவிரிச்சான் மருத்துவ முகாமுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். சுந்தரத்துக்கு களமுனை நிலைமைகள் சற்று பயத்தை நெஞ்சில் இழையோட விட்ட போதிலும் அப்பணிகளைச் செய்வதில் ஒரு உற்சாகமும் நிறைவும் இருப்பதாகவே தோன்றியது.

செல்வமும் ஏனைய இளைஞர்களும் கூட ஆர்வத்துடனேயே பணியாற்றிக் கொண்டிருந்தனர். அதிகாலை ஐந்து மணியளவில் இராணுவத்தினர் முற்றாகவே முகாமை விட்டுப் பின் வாங்கி வெளியேறிவிடவே முகாம் முழுமை யாக போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது. இராணுவத்தினரால் கைவிடப்பட்ட துப்பாக்கிகள், ஐம்பது கலிபர்கள், பி.கே.எல்.எம்.ஜி.கள் என்பன சண்டையின் இறுதி நேரத்தின் போதே விநியோகப் போராளிகளால் களத்துக்கு வெளியே கொண்டுவரப் பட்டுவிட்டன. இரு பீரங்கிகளையும் சற்றுச் சிரமப்பட்டே தளங்களிலிருந்து அகற்ற முடிந்தது. பொழுது விடிந்த போது சண்டை நடந்த பிரதேசத்தைவிட்டுப் போராளிகள் வெளியேறிவிட்டனர். வலையன்கட்டு முகாமிலிருந்து எறிகணைகள் வந்து அப்பகுதியெங்கும் வெடித்துக்கொண்டிருந்தன. கிபிர்களும் இரு தடவைகள் வந்து குண்டுகளைப் பொழிந்துவிட்டுப் போய்விட்டன. போராளிகளின் ஒரு பகுதியினர் முகாமிலிருந்து மேலும் சிறிது தூரம் வலையன்கட்டுப் பகுதியை நோக்கி முன்னேறி காடுகளுக்குள் காவல் நிலைகளை அமைக்க ஆரம்பித்தனர்.

அள்ளப்பட்ட ஆயுதங்களைக் கீரிசுட்டானில் உள்ள போராளிகளின் முகாமுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் செல்வம், சுந்தரம் உட்பட்ட இளைஞர்கள் வெகு உற்சாகத்துடன் ஈடுபட்டனர். சுந்தரம் ஐம்பது கலிபரைத் தடவிப் பார்த்துவிட்டு, “மச்சான்.. இதால எடுத்துச் சுட்டுப்பாக்க வேணும் போல கிடக்குது”, என்றான். செல்வம் சிரித்துக்கொண்டே, “கொண்ணையைப் போல வெளிக்கிட்டால் நீயும் சுடலாம் தானே” என்றான். சுந்தரம் எதுவும் பேசவில்லை! ஆனால் மனதில் ஏதோ ஒரு வித சலனம் ஏற்படுவதை மட்டும் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. சுந்தரசிவம் வீடு வந்து சேர மதியம் மூன்று மணியாகிவிட்டது. அன்று மதிய உணவு உண்ட பின்பே அவனுக்கு வீட்டுக்கு வரமுடிந்தது.

முள்ளிக்குளத்தில் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த போது முருகர் வேட்டைக்காக கீரிசுட்டான் காட்டுக்குள் இறங்கி விட்டார். அங்கு வெடிச்சத்தங்கள் கேட்க மிருகங்கள் கலைபட்டுக் கீரிசுட்டான் காட்டில் இறங்கும் என்பது அவரின் கணிப்பு. அவரின் அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. நல்ல தாட்டான் மரையொன்று அவரின் கண்ணில் பட்டுவிட்டது. ஒரே நெற்றி வெடியில் மரை தலையைக் குத்திக் கொண்டு அப்படியே விழுந்துவிட்டது. முருகப்பரும் சுப்பையாவும் காவுதடியில் போட்டு மரையை வீதிக்குக் கொண்டுவந்தனர். அது அவ்வளவு இலகுவாக இல்லாத போதிலும் வேட்டை மிருகங்களைக் காவு தடியில் போட்டுக்கொண்டுவருவது அவர்களுக்குப் பழகிப்போன விஷயமாகிவிட்டது.

வீதிக்கு வந்ததும் முருகப்பர், ஒரு மரக்குத்தியில் இருந்து கொண்டு, “சுப்பையா.. பொடியளின்ர பேஸில போய் வாகனத்தைக் கொண்டு வந்து இதைக் கொண்டுபோகச் சொல்லு” என்றார். சுப்பையா... அவரின் முகத்தைப் பார்த்துவிட்டு, “அப்ப... எங்களுக்கு..?,” என இழுத்தான்.

“டேய்... நாங்கள் நெடுகத்தானே தின்னிறம்.. பொடியள் இரவிரவாய் சண்டை பிடிக்கிறாங்கள்.. நாளைக்கு களை தீர வடிவாய்த் தின்னட்டன்” என்றார் அவர். சுப்பையாவும் எதுவும் பேசவில்லை. போராளிகளின் முகாமை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சுந்தரசிவமும் ஏனைய இளைஞர்களும் கூட அந்த மரை இறைச்சியுடனான சாப்பாட்டை முடித்துவிட்டே புறப்பட்டனர். அது ஒரு பெரும் வெற்றியெனவே எல்லோராலும் நம்பப் பட்டது. அப்படியே விட்டிருந்தால் அடுத்து கீரிசுட்டான் பின் பாலம்பிட்டி, தட்சிணாமருதமடு, மடு எனத் தொடர்ந்து இராணுவம் முன்னேற ஒரு வாய்ப்பான சூழல் ஏற்பட்டிருக்கும். இந்த முள்ளிக்குளம் முகாம் தகர்க்கப்பட்ட வெற்றிகரத் தாக்குதல் படையினரின் அந்த திட்டத்தையே தகர்த்துவிட்டது.

சங்கரசிவத்தின் மனம் மட்டும், அந்தச் சந்தோஷத்தில் முழுமை யாக இறங்க மறுத்தது. அவனின் நீண்டகால தோழனான கணேஸ் படுகாயமடைந்திருந்தான். அவனுக்கு எதுவும் நடந்துவிடுமோ என நினைத்த போது, அவனால் அதைத் தாங்கவே முடியவில்லை. ஆனால் அவன் மருத்துவத்திற்காக கொண்டு செல்லப்பட்ட நிலையிலும், அவன் தப்பிவிடுவான் என சிவம் நம்பவில்லை. சிவமும் கணேசும் நீண்டகாலமாகவே ஒரே அணியில் போராட்டங்களில் கலந்து கொண்டதாலோ என்னவோ இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். இருவரும் ஒரே விதமான சிந்தனைப் போக்குக் கொண்டவர்களாகவும், ஒரே விதமான ரசனை உள்ளவர்களாகவுமிருந்தனர். குடாரப்பு மாபெரும் தரையிறக்கத்தின் போது இருவருமே ஒன்றாக களமிறங்கினர். வெற்றிலைக்கேணியிலிருந்து கொந்தளித்துக்கொண்டிருந்த கடலில் படகுமூலம் குடாரப்பு நோக்கிப் பயணித்தபோது, கடல் பற்றிய எந்த ஒரு அனுபவமும் இல்லாத சிவத்துக்கு கணேஸ்தான் தைரியமூட்டினான். ஒரு புறம் ஆனையிறவு இராணுவத்தின் முன்னேற்ற முயற்சி, மறுபுறம் முகமாலை இராணுவத்தின் நகர்வு நடவடிக்கைகள், எறிகணைவீச்சுக்கள், கிபிர் தாக்குதல்கள் எனப் பேராபத்துக்களின் மத்தியில் முப்பது நாள்கள் அவர்கள் ஈட்டிய சாதனைகள் ஏராளம். பக்கத்தில் நின்ற போராளி வீரச்சாவடைய, அவனுக்காக அஞ்சலிக்கவே நேரமின்றி அடுத்த தரம் துப்பாக்கி தூக்கும் அவலத்தை அவர்கள் எத்தனையோ தரம் சந்தித்தனர். கைகலப்பாக நெருங்கிய சண்டைகள் இடம்பெறும் போது எத்தனையோ தரம் கணேசை சிவமும், சிவத்தை கணேசும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

ஆனையிறவு வெற்றிகொண்டு கொடியேற்றிய போது இருவருமே அருகருகே நின்று கொடிவணக்கம் செய்ததை இருவரும் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி மகிழ்ச்சியடைவதுண்டு. இருவரும் ஒருவரிடம் ஒருவர் எதையும் மறைத்ததில்லை. கணேஸ் தன் காதலைப்பற்றி சிவத்திடம் தான் மனம் திறந்து கதைப்பதுண்டு. முல்லைத்தீவு படைத்தளத் தாக்குதலின் போது தான் கணேஸ் ரூபாவை முதன் முதல் சந்தித்தான். அளம்பிலில் தரையிறங்கிய இராணுவத்தினர் மேல் நடத்தப்பட்ட தாக்குதலின் போது, கடலில் ஏவப்பட்ட ஒரு எறிகணையால் ரூபா காயமடைந்துவிட்டாள். அதைக் கண்டுவிட்ட கணேஸ் அவளைத் தோளில் கொண்டுவந்து மெடிக்ஸ் போராளிகளிடம் ஒப்படைத்தான்.

அந்தச் சம்பவத்துடன் அவர்களுக்குள் ஏற்பட்ட தொடர்பு காதலாக மாறிவிட்டது. கணேஸ்... ரூபா எழுதிய கடிதங்களை சிவத்துக்கு வாசித்துக் காட்டுவான். தான் எழுதும் கடிதங்களையும் அவன் படிக்கக் கொடுத்ததுண்டு. சிவத்தால் மதிய உணவைக் கூடச் சரியாகச் சாப்பிட முடியவில்லை. பொறுப்பாளரிடம் அனுமதி பெற்றுவிட்டுபண்டிவிரிச்சானை நோக்கிப் புறப்பட்டான் சிவம். அவன் தட்சிணாமருதமடுவை வந்தடைந்தபோது பொது நோக்கு மண்டபம் மஞ்சள், சிவப்பு கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். முள்ளிக்குளம் சண்டையில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர். அவர்களின் அஞ்சலி நிகழ்வுக்காக மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை சிவம் புரிந்து கொண்டான்.

அந்தச் சண்டையின் வெற்றி மூலம் தங்கள் பகுதிக்குள்இராணுவம் ஊடுருவுவது தவிர்க்கப்பட்டுவிட்டதாகவே அம்மக்கள் மனமார நம்பினர். எனவே வீரச்சாவடைந்த போராளிகள் தங்களுக்காகவே உயிரைத் தியாகம் செய்தவர்கள் எனக் கருதிய காரணத்தால் எல்லையற்ற ஒரு வித மதிப்புடன் அவர்கள் அஞ்சலி செய்யக் காத்திருந்தனர். தற்சமயம் போராளிகளின் வித்துடல்கள் அவர்களின் வீடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டதாகவும், அஞ்சலிக்காக அங்கு நான்கு மணிக்கு கொண்டுவரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கு ஒரு மாலையுடன் நின்றிருந்த முத்தம்மா அவனைக் கண்டதும் அவனை நோக்கி வந்தாள். சைக்கிளை நிறுத்திவிட்டு ஒரு காலை நிலத்தில் ஊன்றியவாறு நின்ற சிவம் அவளைப் பார்த்து, “எங்கட வீட்டையிருந்து ஒருதரும் வரயில்லையே?” எனக் கேட்டான்.

“ஐயா, முதலே வந்திட்டார். அம்மா இனித்தான் வருவா” என்றாள் முத்தம்மா! “நான் இஞ்சாலை பண்டிவிரிச்சானுக்குப் போறன், அம்மாட்டைச் சொல்லிவிடு”, என்றுவிட்டுச் சைக்கிளை மிதித்தான் சிவம். அவன் பண்டிவிரிச்சானில் உள்ள மருத்துவமுகாமில், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளரிடம் அனுமதி பெற்று உள்ளே போனபோது, கணேசுக்கு செயற்கைச் சுவாசம் ஏற்றப்பட்டிருந்தது. அரவம் கேட்டு மிகவும் சிரமப்பட்டுக் கண்களைத் திறந்தான் கணேஸ். சிவம் மெல்ல அவன் கைகளைப் பற்றிக் கொண்டான். கணேசின் முகத்தில் மெல்லிய புன்னகை படர்ந்தது. அவனின் வாய் மெல்ல அசைந்தது. குரல் வெளிவரவில்லை. அந்த அசைவைப் பொறுத்து அவன் “ரூபா” என்று அழைக்கிறான் என்பதை சிவம் புரிந்து கொண்டான். “ரூபாவோ, மத்தியானம் அறிவிச்சனான். எப்பிடியும் வந்திடுவாள்,” என்றான் சிவம்.

ஒரு முறை கண்களை மூடிய அவன், சில விநாடிகளின் பின் அவற்றைத் திறந்திருந்தான். மீண்டும் அவன் ரூபா என்று சொல் வதைப் போல் வாயை அசைத்துவிட்டு, கையை மெல்ல உயர்த்திசிவத்தை நோக்கி விரலை நீட்டினான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# "உரு" நமக்கான அங்கீகாரம்



காசிநாதர் ஞானதாஸால் எழுதப்பட்டு இயக்கப்பட்ட "உரு" (TRANCE) குறுந்திரைப்படம் லண்டனில் நடைபெற்ற London Eye International Film Festival இல் "சிறந்த மனித உரிமைகள் குறுந்திரைப்படம்" எனும் விருதை வென்றுள்ளது. இந்த விருது வழங்கும் விழா ஒக்ரோபர் 22 ஆம் திகதி சென்ட்ரல் லண்டனில் உள்ள பிபிசி மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் பங்கு கொண்டு சிறந்த மனித உரிமைகள் குறுந்திரைப்பட விருதை பெற்றுக் கொண்ட, "உரு" குறுந்திரைப்படத்தின் இயக்குநர் காசிநாதர் ஞானதாஸ் "சர்வதேச திரைப்பட விழாக்களுக்காக திரைப்படம் செய்வதில் எனக்கு உடன்பாடு கிடையாது. நான் என்ன கதையை சொல்ல விரும்புகிறேனோ அந்த கதையை எனது விருப்பம் போல் சொல்ல வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அந்த வகையில் படைக்கப்பட்ட எமது "உரு" குறுந்திரைப்படமானது சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்படுவதும் அதற்கு விருதுகள் கிடைப்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சி" எனக் கூறினார்.

கலிபோர்னியாவில் நடைபெறும் The Best Shorts Films Competition சர்வதேச திரைபட விழாவில் இல் அங்கீகார விருதும் (Award of Recognition) லண்ணடனில் நடைபெற்ற Direct Monthly Online Film Festival இல் 2 வது சிறந்த குறுந்திரைப்பட விருதும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடைபெற்ற இறுதிச் சண்டைக்குள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போருக்குப் பிந்திய சூழலில் எதிர்கொள்ளும் வாழ்வியல் மற்றும் உளவியல் பிரச்சினையை பேசும் இக்குறுந்திரைப்படத்துக்கு வழங்கப்பட்ட கௌரவ விருது பற்றி அதன் இயக்குனர் கா.ஞானதாஸ் அவர்கள், "எங்கள் படைப்புகள் எமது மக்களின் வாழ்வியலை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமின்றி எமது மக்களை ஆற்றுப்படுத்துவதாகவும் அவர்களிடத்தில் விழிப்புணர்ச்சியையும் மலர்ச்சியையும் ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டியுள்ளது. அந்த அடிப்படையிலேயே இந்தக் குறுந்திரைப்படத்தை நாம் உருவாக்கினோம். அந்த வகையில் இந்தக் குறுந்திரைப்படம் எமது மக்களின் இரசனையை கருத்தில் கொண்டும் அதே நேரம் அவர்களின் இரசனையை மேம்படுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டது. சர்வதேச திரைப்பட விழாக்களைக் குறி வைத்து இக் குறுந்திரைப்படம் தயாரிக்கப்பட்டதல்ல. சர்வதேச திரைப்பட விழாக்களை குறி வைத்து, அவற்றின் நிஜமங்களுக்கு ஏற்ப எமது படைப்புகளைச் செய்வதைவிட எமது மக்களை குறி வைத்து அவர்களின் இரசனையை மேம்படுத்தும் வகையில் எமது படைப்புகளைச் செய்வதன் மூலமே எமக்கான தனித்துவத்தை நாம் அடையாளம் காணவும் முடியும், உலகுக்கு ஒரு புதிய சினிமா அனுபவத்தை அறிமுகம் செய்யவும் முடியும்.

எமது இந்த முயற்சியை பரீட்சித்துப் பார்க்கும் பொருட்டு எமது உரு குறுந்திரைப்படத்தை சில சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு அனுப்பினோம். அந்த வகையில் எமக்கு கிடைத்துள்ள இந்த சர்வதேச விருது, நாம் சரியான பாதையிலேயே பயணிக்கத் தொடங்கியிருக்கிறோம் என்பதற்கான அங்கீகாரமாகும். மற்றப்படி எமது படைப்புகளை எமது மக்களிடத்தே எடுத்துச் செல்வதும் எமது படைப்புகள் ஊடாக அவர்களை ஆற்றுப்படைத்துவதும் அவர்களிடத்தில் மலர்ச்சியை ஏற்படுத்துவதும் அதனூடாக எமது மக்களிடமிருந்து எமது படைப்புகளுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதுமே உண்மையில் எமது உழைப்புக்கும் முயற்சிக்குமான மிகப் பெரிய விருதாக இருக்கும்" எனக் கூறுகிறார்.

உரு குறுந்திரைப்படத்தின் படப்பிடிப்பு இவ் வருடம் ஜூலை மாதம் மட்டக்களப்பில் நான்கு நாட்கள் நடைபெற்றன. இந்த குறுந்திரைப்படத்தின் தயாரிப்புப் பற்றி ஞானதாஸ் அவர்கள், "ஈழம் சினிமாவுக்கான தயாரிப்பு முறைமை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான முன்மாதிரியாகவும் பரீட்சார்த்த முயற்சியாகவும் நாங்கள் இப்படத்தை தயாரித்தோம். 'ஈழம் சினிமா' என்பது என்னும் சொல் மக்கள் சினிமாவைக் குறித்து நிற்கிறது. அந்தவகையில் எமது படைப்புகள் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு எமது மக்களின் பங்களிப்பை உள்வாங்கியதாக இருக்க வேண்டும். அந்த வகையில் உரு இருபது நிமிட குறுந்திரைப்படமாக இருந்தாலும் அதிகப்படியான மக்களின் பங்களிப்பு, அங்கீகாரம், ஆசீர்வாத்துடன் செய்யப்பட்ட படைப்பாகும். இந்தக் குறுந்திரைப் படத்துக்கான கதை முதற்கொண்டு காசு வரை அனைத்தும் எமது மக்களிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

இதன் படப்பிடிப்பு மற்றும் படப்பிடிப்புக்கு பின்னரான வேலைகளில் கணிசமான அளவு மக்களின் பங்களிப்பை உள்வாங்கினோம் மலையகம், மட்டக்களப்பு, மன்னார், வன்னி, திருகோணமலை, யாழ்பாணத்தைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட கலைஞர்கள், படைப்பாளிகள், தொழில்நுட்ப கலைஞர்களுடன், மட்டக்களப்பு குருக்கள்மடம் மற்றும் கொக்கட்டிச்சோலை கிராமங்களைச் சேர்ந்த மக்களும் புலம்பெயர் தேசத்து ஈழம் சினிமா செயற்பாட்டாளர்களும் இதன் தயாரிப்பில் நேரடியாகப் பங்கு கொண்டனர். இது ஒரு குறுந்திரைப்படத் தயாரிப்பாக இல்லாமல் ஒரு திரைப்படப் பயிற்சிப் பட்டறையாகவும் எமது எதிர்கால திரைப்படத் தயாரிப்புக்கான புதிய அணியை உருவாக்கும் செயற்பாடாகவும் இருக்கும்படி பார்த்துக் கொண்டோம்." எனக் குறிப்பிடுகிறார்.


இக்குறுந்திரைப்படத்தின் முதன்மை பாத்திரத்தை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ் நடித்திருக்கிறார். அவருடன் மட்டக்களப்பைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர், நடிகர், நாடக ஆசிரியர் அலோசியஸ் மற்றும் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக நடன, நாடகத்துறை மாணவர்கள், விரிவுரையாளர்களும் இணைந்து நடித்துள்ளனர். "கடைசித் தரிப்பிடம்" எனும் முழுநீளத் திரைப்படத்தின் ஒளிப் பதிவாளர் சாந்தகுமார் (லண்டன்) இக்குறுந்திரைப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். சஜீத்குமார் (லண்டன்) படத்தொகுப்பைச் செய்துள்ளார். மதீசன் தனபாலசிங்கம் இசையமைப்பையும் செய்துள்ளனர். இக் குறுந்திரைப்படத்தின் இசையை உடுக்கு, பறை, சங்கு போன்ற தமிழர் பாரம்பரிய இசைக்கருவிகளை கொண்டு மதீசன் உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ScriptNetter மற்றும் Eternal Icon இணைந்து தயாரித்துள்ள இக்குறுந்திரைப்படத்தின் தயாரிப்பாளர்களாக சிவதீப்பா சாந்தகுமார் கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ் பணி புரிந்துள்ளனர்.

## ஆட்டுவித்தால்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் பாதுகாப்பில் இருந்தவர்களில் சிலர் முன்னதாகவே நாடு திரும்பி, தென்னிலங்கையில் தங்கியிருந்தனர். அவர்களில் சுரேஸ் பிறேமச்சந்திரனும் ஒருவர். வரதராஜப் பெருமாளை இந்திய அரசாங்கமே பாதுகாத்து வந்தது. சுரேஸ் பிறேமச்சந்திரன் உட்பட பலருக்கு உதவிகளை இந்தியா வழங்கி வந்தது. இதனால் அவர்கள் என்றும் இந்தியாவுக்கு விசுவாசமாக இருந்தனர். ஆனாலும் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட அரசியல் அழுத்தம் - நெருக்கடி நிலையால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புலிகள் விருப்பமின்றி இணைத்துக் கொண்டனர். இதனால்தான் தம்மை மீறி வேட்பாளர்களை நியமிக்கும் உரிமையை புலிகள் இவர்களுக்கு வழங்கவில்லை. இந்நிலையில்தான் தனது நலனைக் கருத்தில் கொண்டு தமிழர் அரசியல் பலத்தைப் பிரிக்கும் சூழ்ச்சிக்கு இவர்கள் துணை போகிறார்கள். இந்தியாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத - அதன் சுயநல விருப்பத்துக்கு தடையாக நம்மிடையே இருக்கும் சக்திகள் இருவர். ஒருவர் வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மற்றையது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இவர்களை மிரட்டி உருட்டி தங்கள் வழியில் கொண்டுவருவது முடியாது என்பதை விட அது தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி விடும். இதனால் இவர்களை தந்திர வழியில் தம் வழிக்குக் கொண்டுவந்து விடுவதற்கு இந்தியா வகுத்த வழியே கொள்கை அளவில் இணைந்திருக்கும் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இணைத்து புதிய கூட்டணியை உருவாக்குதல். அவ்வாறு உருவாகும் தலைமை தங்களின் விருப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதாலேயே புதிய கூட்டணியில் சுரேஸ் பிறேமச்சந்திரனின் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு பெரும்பான்மை - 40 வீதம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தியது.

மேலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தாய்க் கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சின்னத்தில் போட்டியிடாது தவிர்க்கும் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது. இது ஒருபுறம் இருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தனது இன்னொரு விசுவாசியான வரதராஜப் பெருமாளை அல்லது அவர் தலைமையிலானோரை புகுத்திவிடப் பிரயத்தனம் காட்டுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இந்தியா, பிரித்தானியாவுக்கு தேவையான நபர்கள் இருக்கையில், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே இந்தியாவின் சொல்லைத் தட்டாதவராக இருக்கையில் வரதராஜப் பெருமாளை புகுத்திவிடுவதற்கு இந்தியா முனைப்புக் காட்டி நிற்பதற்கும் காரணங்கள் இருக்கின்றன.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்தியாவின் அசைவுகளுக்கு சம்மதம் தெரிவிக்கின்றபோதும், அவர் என்ன செய்வார்? எப்படியான முடிவுகளை எடுக்கிறார் என்பதை இந்தியாவால் நாடி பிடிக்க முடியவில்லை. இதனால் தனது சொல் மீறாத வரதராஜப் பெருமாளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் புகுத்திவிட்டால் போதும், பின்னர் தான் நினைத்தவைகளை சாதிக்க முடியும். ஈ.பி.ஆர்.எல்.எவ்புக்குப் பதிலாக இன்னொரு ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சி உள்ளே வருவதாகவே தெரியலாம் என்று கணக்குப் போடுகிறது இந்தியா. இவை இரண்டும் நிறைவேறிவிட்டால் போதும் தமிழர் அரசியலில் இந்திய நலன் மட்டுமே இருக்கும்... இதற்காகத்தான் அனைத்தையும் ஆட்டுவிக்கிறது...!



# பெண்ணால் வீழ்ந்த முகாபே...!

ஆவதும் பெண்ணாலே மனிதன் அழிவதும் பெண்ணாலே... என்று சினிமா பாடல் உண்டு. அது யாருக்குப் பெருந்துகிறதோ இல்லையோ சிம்பாப்வேயின் ஜனாதிபதி முகாபேக்கு நன்றாகவே பொருந்தும். 30 வருடம் தொடர்ந்த சர்வதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது எதிரிகளோ அல்லது உலக நாடுகளோ இல்லை. அவரின் மனைவியான கிரேஸ் தான். கிரேஸின் ஆட்சி ஆசைதான் இப்போது இருவரையும் வீட்டுக்காவலில் வைத்திருக்கிறது. யார் இந்தக் கிரேஸ் காலக்கடிகாரத்தை மீண்டும் ஒருமுறை பார்க்கலாம்...

ஜனாதிபதி அலுவலத்தில் தட்டச்சு வேலை கிடைத்தபோது அந்த ஒரு குழந்தையின் தாய் ஏதோ அன்றாட பிழைப்பை ஓட்ட வழி கிடைத்துவிட்டது என்றுதான் அவள் நினைத்திருப்பாள். ஆனால் ஜனாதிபதியே வழிய வந்து ஊர், பேர் கேட்க ஆரம்பித்தபோது அது இப்படி தலையெழுத்தை மாற்றிவிடும் என்று யார் நினைத்தார்கள்.

ரொபர்ட் முகாபே தன்னை விடவும் 40 வயது இளமையான கிரேஸ் நொப் பிசொட்வா மீது 1990களின் ஆரம்பத்தில் காதல் கொண்டபோது அதனை கள்ளக் காதல் என்றே ஊர் சொன்னது. திருமணம் முடித்த முதியவரான முகாபேவின் மனைவி சலி முகாபே புற்றுநோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். விமானப்படையின் விமான ஓட்டியான ஸ்டான்லி கொரோசாவை திருமணம் முடித்திருந்த கிரேஸுக்கு ஒரு குழந்தை கூட இருந்தது.

இத்தனை நெருக்கடிகளோடு அந்த கள்ளக்காதல் தொடர்ந்தது. இரண்டு குழந்தைகள் வேறு பிறந்தன. சலி 1992இல் மரணித்தார். 1996 ஆம் ஆண்டு கிரேஸ் தனது முதல் கணவரை விவாகரத்துக் செய்துவிட்டு அடுத்த முகூர்த்தத்திலேயே முகாபேவை திருமணம் செய்தார். 40 ஆயிரம்பேர் பங்கேற்ற அந்த ஆடம்பர திருமணத்தில் நெல்சன் மண்டேலா கூட வந்திருந்தார்.

ஓர் ஆண்டு கழித்து 73 வயது முகாபேவுக்கும் 32 வயது கிரேஸுக்கும் மூன்றாவது குழந்தையும் பிறந்தது. அதுவரை காலமும் நாட்டின் முதல் பெண்மணியாக இருந்து மரணித்த சலியை விஞ்சி தனது செல்வாக்கை அதிகரிப்பது தான் கிரேஸின் முதலாவது போராட்டமாக இருந்தது. அடிக்கடி கணவரோடு பொது நிகழ்ச்சிகளில் பங்கேற் பது கிரேஸின் வாடிக்கையாக மாறியது. ஆனால் அரசியல் பேசமாட்டார். ஆனால் தொண்டு பணிகள் செய்வார். அதுவும் ஆடம்பரமாக இருக்கும்.

அடிக்கடி சொப்பிங் சென்று ஆடம்பர பொருட்களை வாங்குவார். இதனால் நாட்டில் அவருக்கு 'குஸ்ஸி கிரேஸ்' என்று பெயர் கூட இருக்கிறது. குதிகால் நீண்ட பாதணிகளில் நடந்து வரும் கிரேஸிடம் மேட்டுக்குடி பெண்களின் பாவனைகள் அப்பட்டமாக தெரிந்தது. இதனால் அவரை பொதுவாக பொதுமக்களுக்கு பிடிப்பதில்லை. ஆனால் நாளாக நாளாக கிரேஸின் போக்கே மாறியது. சராசரி ஆடம்பர முதல் பெண்மணி என்பதில் இருந்து நாட்டின் பலம்மிக்க ஒருவராக மாறிக் கொண்டிருந்தார்.

எனவே சர்ச்சைகளுக்கும் பஞ்சமில்லை. 2009 இல் - ஹொங்கொங் ஹோட்டல் - ஒன்றுக்கு வெளியில் நின்றிருந்த கிரேஸை பிரிட்டன் புகைப் படப் பிடிப்பாளர் ஒருவர் படம்பிடிக்க முயன்றார். கிரேஸின் மெய்க்காவலர்கள் அவரை துரத்திப் பிடித்து கிரேஸிடம் கொண்டுபோனபோது அந்த முதல் பெண் இரு கன்னத்திலும் அறைக்கு மேல் அறை விட்டிருக்கிறார். அதற்கு பின்னர் சிம்பாப்வே, சிங்கப்பூர், மலேசியா என்று அவரின் சர்ச்சைகள் தொடர்ந்தன. அண்மையில் கூட தென்னாபிரிக்காவில் இளம் அழகி ஒன்றை தாக்கி சிக்கலில் மாட்டிக் கொண்டதால் நாடு திரும்பவே கஷ்டப்பட்டார். இதுபோக திவாலான சுரங்க வர்த்தகத்தில் ஈடுபட்டது துரத்தப் பட்ட முன்னாள் வெள்ளை முதலாளிகளின் பண்ணைகளில் புதிய முதலாளியானது என்று கிரேஸின் ஆசைகள் அதிகம்.

அடுத்த கனவின் அரசியல் பக்கம் தலைகாட்ட ஆரம்பித்தார். ஆளும் கட்சியின் பெண்கள் பிரிவு தலைவியானார். பின்னர் கட்சியில் முடிவுகள் எடுக்கும் உயர் குழுவில் அங்கத்தவரானார். கணவரைப் போலவே பெயருக்கு கலாநிதிப் பட்டமும் பெற்றார். பல்கலைக்கழகத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பதிவு செய்து அதற்குள் கலாநிதிப் பட்டம் பெறுவதென்பது எல்லோராலும் முடியாது.

அரசின் பிரசார இயந்திரம் கிரேஸ் முகாபேவின் புகழ்பாட ஆரம்பித்தது. பேரணிகள் நடத்துவது, கணவருக்கு நிகராக கூட்டங்களில் இருப்பது என்று கிரேஸ் வளர்ந்துவிட்டார். 'நான் ஜனாதிபதியாக வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஏன் முடியாது? நான் ஒரு சிம்பாப்வேயர் இல்லையா?" என்று கிரேஸ் ஒரு கூட்டத்தில் கூறியபோது, இந்த அரண்மனை கிளி எந்தப் பக்கம் பறக்கிறது என்று நாட்டு மக்களுக்கு புரிந்துவிட்டது.

முதல் பெண்மணி ஆளும் சானு பி.எப் கட்சியின் இளைஞர் குழுவில் செல்வாக்கை வளர்த்துக் கொண்டார். அங்கே தனக்கான முகாம் ஒன்றை அமைத்துக் கொண்ட அவர், கணவர் இருக்கும் தைரியத்தில் ஆளும்கட்சியின் பெரும் தலைகளோடு நேருக்கு நேர் மல்லுக்கு நின்றார். முகாபேக்கோ தள்ளாடும் வயது. 90களை தாண்டியும் நாட்டின் தலைவராக இருக்கும் உலகின் ஒரே ஒருவர் அவராகத் தான் இருப்பார். எனவே அடுத்த தலைமைக்கான போட்டி ஆளும் கட்சிக்குள் தீவிரமடைந்தபோது கிரேஸ் முகாபேவும், துணை ஜனாதிபதி எமர்சன் மான்கக்வாவும் கயிறுழுத்துக் கொண்டார்கள்.

கடந்த நவம்பர் 6 ஆம் திகதி மான்கக் வாவை முகாபே பதவி நீக்கியது இந்த அதிகாரப் போட்டியின் உச்சம். கிரேஸ் முகாபே கடைசி காயையும் தனக்கு சாதகமாக நகர்த்திவிட்டார். ஆனால் ஒன்றும் அறியாத பெண்ணாக இருந்து அதிகார நாற்காலிக்கு ஆசைப்பட்டது வரை கிரேஸ் முகாபே முழுக்க முழுக்க தனது கணவரையே நம்பி இருந்தார்.

அதற்கு அப்பால் ஓர் உலகம் இருப்பதை அவர் புரிந்து கொள்ளவே இல்லை. மான்கக்வா என்பவர் சாதாரணமானவரல்ல. 1970களில் இடம்பெற்ற சிறுபான்மை வெள்ளையின ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் முகாபே போன்றே 75 வயது மான்கக்வாவும் ஒரு விடுதலை வீரர் நாட்டின் இராணுவ தலைமைகளின் ஆதரவை வளர்த்துக் கொண்டிருந்தார். எனவே, தன்னை பதவி நீக்கிய விரைவில் இராணுவத்தை கொண்டு முகாபேவின் 37 ஆண்டு பதவி நாற்காலியையே பறித்துவிட்டார்.



( 18 ஆம் பக்கம் பார்க்க)

சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை படமானது. இதேபோல் ஷகிலாவின் வாழ்க்கையும் படமாகிறது. அந்த வரிசையில்தான் ராய் லக்ஷ்மி நடித்துள்ள ஜூலி 2 படமும் உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது நக்மாவின் வாழ்வை கவர்ச்சி காட்சிகளுடன் காட்டப்படுகின்றது எனப் பேசப்படுகின்றது. இதுபற்றி நக்மாவிடம் கேட்டபோது,

“இந்தத் தகவல் எனக்குப் புதிதாக உள்ளது படம் வெளியாகத நிலையில் அதுபற்றி கருத்துக் கூற முடியாது. அது உண்மைதானா என்பதை அறிய நானும் ஆவலுடன் உள்ளேன்.” என்று கூறியிருக்கிறார்.





நயன்தாரா தமிழில் முன்னணி நடிகையாக உள்ளார். அவருக்கு 3 கோடி ரூபாவே சம்பளம் வழங்கப்படுகின்றது. இதே சமயம் நாயக நடிகர்களுக்கு 15 கோடி வரை வழங்கப்படுகின்றது.

நயன்தாரா நடிக்கும் படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றி பெற்றாலும் 3 கோடிதான் சம்பளமாக உள்ளது. படத்தின் மையமாக அவர் இருந்தாலும் இதுதான் சம்பளமாக உள்ளது.

திரையுலகம் ஆணாதிக்கம் நிறைந்தது. அதனால்தான் நாயகி, நாயக நடிகர்களின் சம்பளத்துக்கு இடையில் இவ்வளவு பெரிய வேறுபாடு என்று சாடியிருக்கிறார்.

வழமை. இப்போது
வழக்கம். இதைக்

டெப்னி நாயகியாக
கவுள்ளனர்.



அமலாபால் வசம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மொழிகளில் பல படங்கள் உள்ளன. வரி ஏய்ப்பு சர்ச்சையில் சிக்கியிருக்கும் அவர் போலி முகவரி கொடுத்து கார் வாங்கினார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அமலாபால் வரி ஏய்ப்பு செய்வில்லை என அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால் இந்த விடயம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என ஆளுநர் கிரண்பேடி தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே அமலாபால் கொடுத்த முகவரிக்கு சென்று ஆய்வு நடத்திய குழு அந்த வீட்டில் குளியலறை இல்லை எனக் கூறியிருக்கிறது. இந்த விடயம்தான் சமூகவலைத்தளங்களில். இப்போது ட்ரெண்ட் ஆகியுள்ளது.

தொகுப்பு :- சி.விமலன்



# நேரமாற்றம்




லாலிகா உதைபந்தாட்டத் தொடரில் ஒட்டு மொத்த உதைபந்தாட்ட ரசிகர்களுமே ஆவலுடன் எதிர்பார்க்கும் போட்டி என்றால் அது பார்சிலோனா றியல் மட்றிட் அணிகளுக்கிடையிலான எல் கிளாசிகோ போட்டிதான். உதைபந்தாட்ட உலகின் இரு பெரும் கழகங்களான இவ்விரு அணிகளிலும் உலகின் நட்சத்திர வீரர்களான மெஸ்ஸியும் றொனால்டோவும் எதிரெதிராக விளையாடி வருகின்றனர். அந்தவகையில் இந்தப் பருவ காலத்துக்கான முதல் எல் கிளாசிகோ போட்டி இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடாகி உள்ளது.

வழமையாக லாலிகா தொடரில் நடைபெறும் முக்கியமான போட்டிகளை ஆசிய நாட்டு ரசிகர்கள் நள்ளிரவிலேயே தூங்கி வழிந்து பார்ப்பது வழக்கம். ஆனால் இம்முறை அதைப் போக்கும் விதமாக லாலிகா நிர்வாகமும் சொனி பிக்சர்ஸ் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க்கும் இணைந்து எல் கிளாசிகோ போட்டியை இந்திய நேரப்படி மாலை 5.30 மணிக்கு நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

இதற்குக் காரணம் சென்ற வருடம் ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் உதைபந்தாட்ட லீக் போட்டிகளில் 300 இற்கும் மேற்பட்ட போட்டிகள் சொனி பிக்சர்ஸ் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க் சனல்களில் நேரடி ஒளிபரப்பப் பட்டாலும் கடந்த வருடம் நடைபெற்ற முதல் எல் கிளாசிகோ போட்டியே இந்திய ரசிகர்களால் அதிகம் பார்க்கப் பட்ட போட்டியாக உள்ளது.

எனவே இதனையும் கருத்திற் கொண்டு இந்திய ரசிகர்களை மேலும் உள்ளீர்க்கும் முகமாக எல் கிளாசிகோ போட்டியின் நேரடி ஒளிபரப்பை டெல்லியில் உள்ள என்எஸ்ஐசி - ஒக்லா மைதானத்தில் திரையிட இருதரப்பும் முடிவு செய்துள்ளார்கள். தனியே ஒளிபரப்பைத் திரையிடுவதாக மட்டும் இல்லாமல் போட்டியை ரசிகர்கள் தமது வழக்கமான மைதானச் செயற்பாடுகளோடு குதூகலமாகக் கொண்டாடுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் போட்டியை ஸ்பெயின் மைதானத்தில் இருந்தே பார்ப்பதான ஒரு உணர்வை ஏற்படுத்தி இந்திய ரசிகர்களுக்கு ஒரு மறக்க முடியாத அனுபவத்தை வழங்குவதே அவர்களின் நோக்கமாகும். இந்தப் போட்டியை சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய ரசிகர்கள் பார்வையிட வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மண்ணின் மைந்தர்கள்



witter – @pca

பிறிஸ்பனில் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியில் 28 வருடங்களின் பின்னர் ஒரு அரிதான சம்பவம் இங்கிலாந்து அணியில் நிகழ்ந்தேறியுள்ளது. இங்கிலாந்து தேசிய அணியில் காலங்காலமாக விளையாடி வரும் வீரர்களில் சொற்ப எண்ணிக்கையிலான வீரர்கள் இங்கிலாந்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களல்ல.

பெற்றோரின் தொழில் நிமித்தமும் இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்க வேண்டும் என்ற உத்வேகத்தில் புலம் பெயர்ந்தவர்களும் இருக்கின்றார்கள். கடந்த இரண்டு தசாப்த காலத்தை எடுத்துக் கொண்டால் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்த வீரர்களான அன்ட்ஷரூ ஸ்ரோஸ் மற்றும் கெவின் பீற்றர்சன் போன்றவர்கள் தென்னாபிரிக்காவில் பிறந்து இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர்கள்.

தற்போது விளையாடி வரும் இங்கிலாந்து அணியில் பென் ஸ்ரோக்ஸ் நியூசிலாந்தில் உள்ள கிறிஸ்சேர்ச் நகரத்தில் பிறந்தவர். அதுபோல ஹரி பெலன்ஸ் சிம்பாப்வேயிலும் சாம் றொப்சன் அவுஸ்ரேலியாவிலும் பிறந்தவர்கள். இந்நிலையில் பிறிஸ்பன் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து சார்பில் விளையாடிய 11 வீரர்களும் இங்கிலாந்திலேயே பிறந்து இங்கிலாந்து அணியில் இடம்பெற்றவர்கள். இவ்வாறான அபூர்வ நிகழ்வு முதன்முறை 1989 ஆம் ஆண்டு ஜூலை பேர்மிங்ஹாம் ஆஷஸ் டெஸ்ட் போட்டியிலேயே நிகழ்ந்துள்ளது.

அதேசமயம் ஆஷஸ் தொடர் தவிர்ந்த ஏனைய டெஸ்ட் போட்டிகளிலும் 14 வருடங்களுக்கு முன்னர் இந்த அபூர்வம் இருதடவைகள் நிகழ்ந்துள்ளது. அந்தவகையில் 2003ஆம் ஆண்டு ஜூலை இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியிலும் அதேபோல 2003 ஆம் ஆண்டு டிசம்பர் காலியில் நடைபெற்ற இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியிலும் இது நிகழ்ந்துள்ளது. இந்த நான்கு சந்தர்ப்பங்கள் தவிர்ந்த இங்கிலாந்து விளையாடிய ஏனைய டெஸ்ட் போட்டிகளில் குறைந்த பட்சம் இங்கிலாந்தில் பிறவாத ஒரு வீரராவது கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பயணம்

இங்கிலாந்தைச் சேர்ந்த கிரிக்கெட் ரசிகர் ஒருவர் 21 நாடுகளின் ஊடாக 35,000 கிலோமீற்றர் தூரம் பிரயாணம் செய்து அவுஸ்ரேலியாவை வந்தடைந்துள்ளார். எட் மில்லர் என்ற இந்த ரசிகர் இங்கிலாந்தில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார். இம்முறை அவுஸ்ரேலியாவில் நடைபெறும் ஆஷஸ் தொடரை நேரடியாகக் கண்டு களிப்பதே இவரது குறிக்கோள். ஆனாலும் இந்தப் பயணம் ஆகாய மார்க்கமாக அல்லாமல் தரைவழிப் பயணமாகவே அமைய வேண்டும் என்று அவர் முடிவு செய்ததனால் 3 மாதங்களுக்கு முன்னரே இங்கிலாந்தில் இருந்து புறப்பட்டுள்ளார்.

ஆனாலும் இந்தப் பிரயாணத்தை வெறும் பிரயாணமாக்க விரும்பாமல் பிரயோசனப்படுத்த எண்ணிய அவர் சருமப் புற்றுநோய்க்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் அறக்கட்டளை ஒன்றுக்கு நிதி சேகரித்துக் கொடுப்பதையும் தனது பயணத்தின் ஒரு பகுதியாக மேற்கொண்டு வந்துள்ளார்.

ஆனாலும் முதற் டெஸ்ட் போட்டி நடைபெற்ற பிறிஸ்பன் மைதானத்திற்கு போட்டி ஆரம்பமாகும் நேரத்திற்கு இவரால் வரமுடியவில்லை. மாறாக முதல்நாள் ஆட்ட நேர முடிவிலேயே இவரால் வந்தடைய முடிந்தது. இந்நிலையில் இங்கிலாந்தில் இருந்து தரைவழியாக பிறிஸ்பனுக்கு வந்தடைய வேண்டும் என்ற தனது சவால் நிறைவேறியுள்ளதால் இன்று (டிசம்பர் 2) தொடங்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்காக விமானத்தின் மூலமே அடிலெயிட் செல்லவுள்ளதாகக் கூறியுள்ளார்.

அத்தோடு ஆஷஸ் தொடரை இங்கிலாந்து 3 : 2 என்று கைப்பற்றும் எனவும் ஜொனி பேர்ஸ்ரோவ் தொடர் நாயகன் விருது பெறுவார் எனவும் எதிர்வு கூறியுள்ளார். இவரது ஆருடம் பலிக்கிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 02.12.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.